இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Register as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021-222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர் : 137
இதழ் : 02
பக்கங்கள் : 08
திகதி: 27.01.2013
விலை : 15.00

# சில்லாலைப் பங்கில் அருளாளர் யோசவ்வாஸ் அடிகளாரின் நினைவாலயத் திறப்பு விழா

இலங்கை அப்போஸ்தலர் அருளாளர் யோசவ்வாஸ் அடிகளார் 326 ஆண்டுகளுக்கு முன்னர் நாற் சதுர வீடு அமைத்து வாழ்ந்து திருப்பலி நிறைவேற்றிய இடம் என நம்பப்படும் நலப்பகுதியில், அடிகளாரின் விண்ணகப் பிறப்புத் தினமான 16.01.2013 அன்று பி.ப. 4.45 மணிக்கு அடிகளாரின் பெயரால் கட்டப்பட்ட நினைவாலயத் திறப்பு விழா நிகழ்வுகள் நடைபெற்றது.

சில்லாலை மண்ணில் அருளாளர் யோசவ்வாஸ் அடிகள் தங்கியிருந்து பணியாற்றிய இடத்தில் அருளாளருக்கு ஒரு நினைவாலயம் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தை சில்லையூர் பங்குத்தந்தை அருட்பணி. செ. நேசன் பங்குமக்களுக்கு தெரியப்படுத்திய போது, மக்களும் அம்முயற்சிக்கு மிகுந்த ஆர்வத்தைக் காட்டி 16.01.2011 அன்று சில்லையூர் பங்குத்தந்தை அவர்களால் நினைவாலயத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இலங்கையின் பல்வேறு இடங்களிலும் வெளிநாடுகளிலும் வாழும் தூய கதிரை அன்னை ஆலயத்தை சேர்ந்த மக்களின் நிதி உதவியோடும், யாழ் ஆயர் அவர்களின் நிதிப் பங்களிப்போடும். பங்குத் தந்தையின் அயராத கடும் முயற்சியாலும் அழகுற அமைக்கப்பட்ட நினைவாலயத்தை எமது யாழ் ஆயர் அதி வந்தனைக்குரிய இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் ஆசீர்வதித்து திறந்து வைத்தார்.





தொடர்ந்து நினைவாலய முன்றலில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழாத் திருப்பலியை அருளார் யோசவ்வாஸ் பீடப்பணியாளர் மன்றத்தினர் சிறப்பித்தார்கள். இளவாலை மறைக்கோட்ட குரு முதல்வர் அருள்பணி யூஜின் பிரான்சிஸ் அடிகளார் தலைமையில், யாழ் மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருள்பணி J.B அன்ரனிதாஸ் அடிகளாரும் சில்லையூர் குரு மைந்தர்களும், ஏனைய குருக்களும் இணைந்து விழா திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்கள்.

திருப்பலி மறையுரையின்போது மறைக்கோட்ட முதல்வர், அருளார் யோசவ்வாஸ் அடிகள் இலங்கையில் மறைந்து கொண்டிருந்த கத்தோலிக்கத்துக்கு முகம் கொடுத்து தனது பணியை நிறைவாகச் செய்தவர். நாமும் எமது திருச்சபைக்கு எதிராக வருகின்ற சவால்களை முறியடித்து, இயேசுவை மற்றவர்களுக்கு கொடுக்கும் இறையரசுப் பணியில் அயராது ஆர்வத்தோடு உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். திருப்பலியின் இறுதியில் பங்குத்தந்தை அருட்பணி S. நேசன் இந் நினைவாலயத்தை கட்டுவதற்கு உதவி செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து அனைவருக்கும் திருநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். தொடர்ந்து எமது வந்தனைக்குரிய ஆயர் அவர்களால் அருளாளர் யோசவ்வாஸ் அடிகளாரின் திருச்சுரூப ஆசீர் வழங்கப்பட்டது.

இம்மண்ணில் வாழ்ந்து பணியாற்றிய அருளாளர் யோசவ்வாஸ் அடிகளாருக்கு என ஒரு நினைவாலயம் அமைக்கப்பட்டது. வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்குரியதுமாகும் என ஆயர் அவர்கள் குறிப்பிட்டார்.

திருப்பலியைத் தொடர்ந்து இந்நாளை இன்னும் மெருகூட்டும் முகமாக அருளாளர் யோசவ்வாஸ் அடிகளாரின் மறைத்தூதுப் பணியை சித்தரிக்கும் "மறைகாத்த மாவீரன்" என்னும் நாட்டுக்கூத்து சில்லாலைக் கலைஞர்களினால் மேடையேற்றப்பட்டது. இந்நிகழ்வுகளில், ஆயர், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சதோதரர், இறைமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

இந் நினைவாலயம் எண்கோண அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நீங்களும் இந்நினைவாலயத்தை தரிசித்து உங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்த வாய்ப்பாக அமையும் என்பது எமது நம்பிக்கை.

## கிளிநொச்சி மேய்ப்புப்பணி நிலையம் திறப்பு விழா

கிளிநொச்சியில் பல இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட மேய்புப் பணி நிலையம் எதிர் வரும் தை 30ம்திகதி யாழ் ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது. கிளி, முல்லை மறைக்கோட்ட மேய்ப்புப்பணி மேம்பாட்டிற்காகவும் மறையாசிரியர் ஒன்றுகூடலுக்காகவும் இம்மேய்ப்புப் பணி நிலையம் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. நகரத்தின் மைய பகுதியில் இந்நிலையம் அமைவதால் போக்குவரத்துக்கும் பொது நிலையினருக்கு வசதியாக அமைகின்றது. இத்திறப்பு விழா அன்று கிளிநொச்சி மறையாசிரியர்களுக்கான விசேட கருத்தரங்கு ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## ஆரோபணம் சிறுவர் இல்லம் மீண்டும் ஆரம்பம்

யுத்த கால இடப்பெயர்வின்போது மூடப்பட்ட உருத்திரபுரம் ஆரோபணம் சிறுவர் இல்லம் மீண்டும எதிர்வரும் தை 31ம் திகதி யாழ் ஆயர் அவர்களினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ் ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திருப்பலி ஒப்புக்கொடுத்து வைபவரீதியாக சிறுவர் இல்லத்தை ஆரம்பித்து வைப்பார். இங்கு கடந்த காலங்களில் போரினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பெற்றோரை இழந்த பிள்ளைகள் தங்கி இருந்து படித்து வந்தனர்.

ஆரோபண இயக்குநர் அருட்பணி. சாள்ஸ் போர் அடிகளாரின் அயராத முயற்சியால் போரினால் பாதிக்கப்பட்ட கட்டிடங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் மீள திறந்து வைக்கப்படுகின்றது. இந்நிலையத்திற்கான நிர்மாணப் பணிக்கு உதவி வழங்கிய வெளிநாட்டு உபகாரிகளும் இத்திறப்பு விழாவிற்கு வருகை தருவர் என எதிர்பார்க் கப்படுகின்றது.

## கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் - நிகழ்வுகள்

கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் தை 18ம் திகதி முதல் 25ம் திகதிவரை திட்டமிட்டு நடைபெறுகின்றது.

யாழ் கிறிஸ்தவ ஒன்றியமும் மறைமாவட்ட ஒன்றிப்புக்கான உரோமன் கத்தோலிக்க ஒன்றிப்பின் ஆணைக்குழுவும் இணைந்து இச் செபவழிபாடுகளை ஒழுங்கு செய்துள்ளன. இவ் வழிபாடுகளில் கருத்துரைகளை அதி-வண- கலாநிதி S. ஜெபநேசன் அருள்முனைவர் P. ஜெபரட்ணம் அருட்பணியாளர்கள் W. ரவிசங்கர், V.P தனேந்திரா, S. சொலமன், ஐ. குணசீலன் இ. ராஜ்குமார் என்போர் வழங்குவர்.

உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் வழிபாடுகள் தை 24 வியாழக்கிழமை யாழ் புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் மாலை நடைபெறும்.

இறுதிநாள் வழிபாடு தை 25ம் திகதி வெள்ளி ப.ரி யோவான் கல்லூரி ஆலயத்தில் நடைபெறும்.

கத்தோலிக்க திருச்சபையின் சார்பில், மறைமாவட்ட ஒன்றிப்புக்கான ஆணையகத்தின் இயக்குனர் அருட்பணி. தயாபரன் அடிகள் ஒருங்கிணைப்பாளராக கிறிஸ்தவ ஒன்றிப்பு வார நிகழ்வுகளை ஒழுங்கு செய்கின்றார்.

## எதிர்கால வாழ்வின் சவால்களை இறைவனின் துணையுடன் எதிர்கொண்டு வாழ்வோம்

### கிளிநொச்சியில் அருட்தந்தை மங்களராஜா அடிகளார்

கடந்த கால இழப்புக்கள் எங்களைப் பாதித்தாலும் நாங்கள் நம்பிக்கையோடு வாழ வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் இறைவன மீது நம்பிக்கை எமக்குத் தேவைப் படுகிறது. இவ்வாறு தெரிவித்தார் யாழ். மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவர் அருட்தந்தை மங்களராஜா அடிகளார்.

கடந்த முப்பது வருட காலப் போரின்போது இறந்த அனைத்து மக்களுக்குமான சர்வமதப் பிரார்த்தனை நிகழ்வு கிளிநொச்சியில் அமைந்துள்ள கியூடெக் கரித்தாஸ் வன்னி அலுவலகத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை யாவீஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து காண்டு உரையாற்றும் போதே அடிகளார் இதனைத் தெரிவித்தா். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

போரால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய எஞ்சிய வாழ்க்கையை நம்பிக்கையுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். போரின் பின் உறவுகளை வாழ வைக்க அயராது பாடுபட வேண்டும். இழப்புக்கள் எங்களைப் பாதித்தாலும் நம்பிக்கையோடு வாழவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் இறைவனுடைய பார்வை எமக்குத் தேவைப்படுகிறது.

கடந்த முப்பது வருட காலப் போரில் பல்லாயிரக்கணக்கான

(8ம் பக்கம் பார்க்க...)

## எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

### கைதானவர்களை 48 மணிநேரம் தடுத்து வைக்கும் சட்டமூலமும் ஜனநாயகமும்

ஜனநாயகம் தொடர்பில் பல்வேறுபட்ட விளக்கங்கள் உண்டு. இன்றைய நவீன அரசியலில் ஒவ்வொருவரும் தத்தமது வசதிக்கேற்ப ஜனநாயகத்திற்கு விளக்கம் கொடுக்கின்றனர். குறிப்பாக முதலாளித்துவ அரசியலில் இருப்பவர்கள் ஜனநாயகத்திற்கு கொடுக்கும் விளக்கம் புதுமையானது. இலங்கை உட்பட அமொிக்கா, பிரித தானியா போன்ற வல்லரசு நாடுகள் எல்லாமே தமது முத லாளிததுவத்திற்கான ஒரு ஜனநாயகத்தை உருவாக்கி யுள்ளன. நடைமுறையில் தமது மேலதிகமான தேவை களுக்கு ஏற்பவும் அது மாற்றமடையக்கூடியது எனலாம். ஏன் இதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல.

ஜனநாயகத்திற்கு சரியான வரைவிலக்கணம் இல்லை. இருந்தாலும் ஆபிரகாம்லிங்கன் கூறிய மக்களால் மக்களுக்கானது என்ற அந்த விளக்கத்தை வைத்துக் கொண்டு இநத முதலாளித்துவ நவன அரசுகள் வரிச சுமைகளை மக்களின் தலைகளில் சுமத்தி விடுகின்றன. இன்னும சொலலபோனால கருதது சுதநதிரம பேசசு சுதந்திரம் எனபதை வைத்துக் கொண்டு எல்லோரையும் பேச வைத்து பின்னர் தாம் நினைத்தவற்றை செய்து விட்டுபோவதும் இந்த நவீன அரசுகளின் ஜனநாயகமாக இருக்கின்றது.

கருத்து சுதந்திரம், பேச்சு சுதந்திரம் என்றுகூறி நிதானமாக கையாளாது கோமாளித்தனமாக பேசவிட்டு அல்லது மூன்றாம் தர அரசியல்வாதிகளை கதைக்க விட்டு குழப்பியடிப்பது இன்னொரு வகையானது. பின்னர் அதுதான் ஜனநாயகம். இது ஜனநாயக நாடு எனறு இந்த நவீன அரசுகள் கூறும். அதனை மக்கள் விரும்பியோ, வரும்பாமலோ ஏற்க வேண்டிய பரிதாபநிலை. சில வேளை களில் மக்களையும் ஊடகங்களையும் எதனைப்பற்றியுமே பேச, எழுத விடாது தாம் நினைத்த கொள்கைகளை திட்டங்களை செய்து விட்டு செல்லுகின்ற பண்பும் இந்த நவீன அரசுகளின் ஜனநாயகத்தில் அவ்வப்போது தலை காட்டுவதும் உண்டு.

இலங்கையும் சோசலிச ஜனநாயக குடியரசு என்று தான் சொல்லப்படுகின்றது. ஆனால் தமிழர் பிரச்சினைகள் எழ ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து ஒருபக்க ஜன நாயகம்தான் தலைகாட்டி வருகின்றது. 2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் தமிழ் மக்களை பொறுததவரை ஜனநாயகத்துககான ஒரு சூழல அல்ல. எனினும் சமாதானம் வந்துவிட்டது என்று கூறி வரும் அரசாங்கம் தேசிய மீள் நல்லிணக்கத்துக்கான எற்பாடுகளில் சிறிதளவும் முன்னேற்றத்தை ஏற்படுத்த வில்லை. ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரிக்கும் 18ஆவது திருத்தச் சட்டமூலம் உருவாக்கப்பட்டு தற் போது நீதித்துறையும் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள் ளதாக எதிாககடசிகள குறறம சுமததியுளளன.

கைது செய்யப்படும் சந்தேக நபர் ஒருவர் 24மணி நேரத்திற்குள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவதுதான் உண்மையான ஜனநாயகம். இலங்கையில் எதற்காக இந்த சட்டமூலம்? என்ற கேள்விகள் பொதுமக்கள் மத்தி யிலும் எழ ஆரம்பித்துள்ளன. பொலிஸாருக்கு அதிகளவு அதிகாரங்களை வழங்குவதன்மூலம் பாதிக்கப்படபோவது தமிழ இளைஞா யுவதிகள மாததிரம அலல தென பகுதியில் மாற்று அரசியல் செய்யும் கட்சிகளின் பிரதி நிதிகளும் பாதிக்கப்படுவர். ஜெனீவா மனித உரிமைச் சபையில் கடந்த வருடம் மார்ச் மாதம் இலங்கை மீது கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு பிரேரணை ஒன்றும் அமெரிக்காவினால் நிறைவேற்றப்பட்டது. அடுத்த ஒரு ஆண்டுக்குள் இலங்கை அரசிடம் இருந்து இன ஒற்றுமைக்கான ஒரு நல்ல பதிலை எதிர்ப்பார்ப்பதாக சர்வதேச அரசுகள் கூறியிருந்தன. ஆனால் இந்த ஆண்டும் ஏமாற்றம் தானா?

**அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்**

## பாபிலோனின் தொங்கும் தோட்டம்

பாபிலோனின் தொங்கும் தோட்டம் உலகின் ஏழு அதிச யங்களுள் ஒன்றாகும். 43 ஆண் டுகள் பாபிலோனின் அரசராக ஆட்சி செய்த 2ம் நெபுகத்னேச ரால் கி.மு. 600ல் இது கட்டப்பட்ட தாக வரலாற்று ஏடுகள் கூறு கின்றன. பாபிலோன் சமதளமான வறண்ட □மி. சிறிதளவே மழை பெய்யும் பசுமையையும் அதிக மாகக் காண முடியாது. ஆனால் நெபுகத்னேசரின் மனைவி Amytisன் சொந்த ஊர் மலைப் பாங்கான எப்பொழுதும் பசுமை யாகக் காணப்படும். எனவே Amytis வாழ்ந்த தோட்டத்தைப் போன்று இத்தோட்டமும் பல வகையான மலர்கள், கனிகள், விலங்குகள் மற்றும் நீர் வீழ்ச்சிகளைக் கொண்டதாய் இருந்தது. உலகம் முழுவதிலுமிருந்து இவை கொண்டு வரப்பட்டன. இத்தோட்டம் ஈராக்கின் பாக்தாத் நகருக்குத் தெற்கே ஏறக் குறைய முப்பது மைல்கள் தூரத் தில் யூப்ரட்டீஸ் நதிக்கரையோரத்தில அமைக்கப்பட்டது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட மாபெரும் நிலநடுக்கத்தால் இந்தப பாபிலோனின் தொங்கும் தோட்டம் அழிக்கப்பட்டுவிட்டது. இது அழி யாமல் இருந்ததால் உலகின் ஏழு அதிசயங்களுள் இரண்டாவது பழமையான அதிசயமாக இருந் திருக்கும் எனச் சொல்லப்படுகிறது. அண்மையில் யூப்ரட்டீஸ் நதிக் கரையோரங்களில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் 25 மீற்றர் உயரமான தடித்த கனமான சுவர் களும், விதைகள் பரவிக்கிடந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே இவ்வராய்ச்சிகள் பாபிலோனின் தோட்டம் இருந்தது என்பதை உறுதி செய்கின்றன.

## ஊடக சுதந்திரத்தில் இலங்கை 163வது இடம் — இந்தியா 131வது இடம்

2011 – 2012ம் ஆண்டுகளை அடிப்படையாகக் வைத்து ஊடகச் சுதந்திரம் பற்றி எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் (Reporters without Borders) என்ற அமைப்பு வெளியிட்டுள்ள தரவரிசையில் இலங்கை 163வது இடத்தில் உள்ளது.

179 நாடுகள் அடங்கிய இத்தரவரிசை பட்டி யலின் படி உலகில் சிறப்பான ஊடகச் சுதந்திரம் நிலவும் நாடாக பின்லாந்து முதலிடம் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து நோர்வே, எஸ்தோனியா, நெதர்லாந்து, ஆஸ்ரேலியா ஆகிய நாடுகள் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன.

வெளியான அப்பட்டியலில் இந்தியா 131வது இடத்தையும் பாகிஸ்தான் 151வது இடத்தையும் பெற்றுள்ளன. உலகில் மிகவும் மோசமான ஊடகச் சுதந்திரம் நிலவும் நாடாக எரித்திரியா விளங்குகின்றது. இது 179வது இடத்தில் உள்ளது.

எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு 2002ம் ஆண்டு தயாரித்திருந்த பட்டியலில் இலங்கை 51வது இடத்தினை பெற்று, ஊடகச்சுதந்திரத்தில் முன்னேறிய நாடாகக் கருதப்பட்டது.

எனினும் கடந்த 2011 மற்றும் 2012ம் ஆண்டு களில் இலங்கையில் ஊடகச் சுதந்திரம் அதிக அளவில் பாதிக்கப்பட்டதால், அந்நாடு 163 இடத்திற்கு தள்ளப் பட்டுள்ளது.

## அன்னை தெரேசா துவக்கிய பணிகள் இறைவன் எங்களுக்கு வழங்கிய கொடைகள்

**~ அருள்சகோதரி கிளன்ரா ~**

கிறிஸ்துவின் உடலை ஒவ்வொரு நாளும் திருப்பலியிலும், நோயுற்றோரின் வடிவிலும் சந்திப்பது நம்பிக்கை ஆண்டில் எங்களுக்கு வழங்கப்பட்டுள□ள. ஒரு கொடை என்று அன்னை தெரேசா பிறரன்புச் சபை அருட்சகோதரி ஒருவர் கூறினார்.

'அன்பு செயல்வடிவில்' என்ற விருது வாக்குடன் முத்திப்பேறுபெற்ற அன்னை தெரேசா 60 ஆண்டுகளுக்கு முன்னர் கொல்கத்தாவில் துவக்கிய பணிகள் இறைவன் எங்களுக்கு வழங் கிய கொடைகளாக உள்ளன என்று அருள் சகோதரி கிளன்ரா கூறினார்.

அனைவராலும் புறக்கணிக்கப்பட்டு வாடிய நோயுற்றவர்களுக்கென 1962ம் ஆண்டு கொல்கத்தாவில் அன்னை தெரேசா அவர்களால் துவக்கப்பட்ட நிர்மல் கிறிடே என்ற இல்லத்தின் தலைவி யாகப் பணியாற்றும் அருள் சகோதரி கிளன்ரா நம் பிக்கை ஆண்டைக் குறித்து ஆசிய செய்தி நிறுவனத் திற்கு அளித்த பேட்டியொன் றில் இவ்வாறு கூறினார்.

நிர்மல் கிறிடே என்ற இந்த இல்லத்தின் வழியாக இதுவரை 87,000க்கும் அதிக மானோர் பயன் பெற்றுள்ள னர் என்று கூறிய அருள் சகோதரி கிளன்ரா இப்பணி யில் தங்களையே ஈடுபடுத்த வரும் நாட்டு இளையோருக் கும் இவ்வில்லம் நம்பிக்கை தரும் அடையாளமாக விளங்குகின்றது என்று எடுத்துரைத்தார்.

## கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தின் முக்கியத்துவம் பற்றி கர்தினால் குர்ட் கொச்

ஜனவரி 18, இவ்வெள்ளிக் கிழமை முதல் ஜனவரி 25, வரு கின்ற வெள்ளியன்று கொண்டாடப் படும் புனித பவுலின் மனமாற்றம் திருநாள் முடிய கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வாரம் கொண்டாடப்படுகிறது.

செனட் கத்தோலிக்க நாளி தழுக்குப் பேட்டியளித்த கிறிஸ்தவ ஒன்றிப்பு வளர்ச்சி திருப்பீட அவை யின் தலைவர் கர்தினால் இந்த ஒன்றிப்பு வாரத்தின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார்.

19ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ ஒன்றிப்பு குறித்த ஆவலை Anglican சபையினர் வெளியிட்ட போது, அதனை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை 13ம் லியோ இந்த ஒன்றிப்பு வாரத்தை ஒரு செப முயற்சியாகத் துவக்கினார் என்று கர்தினால் தன் பேட்டியில் விளக் கியுள்ளார்.

மத உரிமைகள் பற்றி இரண் டாம் வத்திக்கான் சங்கம் வெளி யிட்ட கருத்துக்கள் அனைத்து கிறிஸ்தவ சபைகளின் அடிப்படை உரிமைகளையும் மதித்து வெளி யிடப்பட்டது என்பதை உணரலாம் என்று கர்தினால் கொச் சுட்டிக் காட்டினார்.

இன்றைய உலகில் மத உரி மைக்காக துன்புறும் மக்களில் 80 விழுக்காட்டினருக்கும் அதிகமான வர்கள் கிறிஸ்தவர்களே என்பதை வலியுறுத்திக் கூறிய கர்த்தினால் இச்சூழலில் கிறிஸ்தவ ஒன்றிப்பு இன்னும் அதிகம் முக்கியத்துவம் பெறுகிறது என்பதை எடுத்துரைத்தார்.

## கொலம்பியாவில் பங்குக்குரு ஒருவர் கொலை

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் 55 வயதாகும் கத் தோலிக்க அருள்பணியாளர் ஒருவர் இப்புதனன்று கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். கொலை செய்யப்பட்டுள்ள எல் அல்பேக் கியு பங்குக்கு ஜோஸ் பிரான்சிஸ்கோ சமூகநலப் பணிகளில் அதிகமாக ஈடுபட்டு வந்தவர் எனவும், இவருக்கு எதிரிகள் இல்லை எனவும் பங்கு மக்கள் கூறியுள்ளனர்.

திருட்டே இக்கொலைக்கு காரணம் எனக் காவல்துறை சந்தே கிக்கின்றது. அமெரிக்கக் கண்டத்தில் கத்தோலிக்க மேய்ப்பர்கள் கொலை செய்யப்படுவது தொடர்ந்து நான்காவது ஆண்டாக அதிகரித்து வருவதாக Fides செய்தி நிறுவனத்தின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

கொலம்பியாவில் 2012ம் ஆண்டில் ஒரு குருவும், 2011ம் ஆண்டில் 6 குருக்களும் ஒரு பொதுநிலை விசுவாசியும், 2010 ஆண்டில் 3 குருக்க ளும் ஒரு துறவியும், 2009ம் ஆண்டில் 5 குருக்களும் ஒரு பொதுநிலை விசுவாசியும் கொல்லப்பட்டுள்ளனர்.

# நம்பிக்கையின் வாயில் எனும் ஆண்டில் நம் தந்தை தோமஸ் அ.ம.தி அவர்களின் ஆன்மீகம் ஒரு பகிர்வு

## செபமாலைக் கன்னியர், பாண்டியன்தாழ்வு.

கடவுளை நம்புவதற்கு எடுக்கும் மனிதனின் முதல் முயற்சியே கடவுளின் கொடை என இதயம் நமக்கு அறிவுறுத்துகின்றது. இது இதயத்தில் எழும்பும் தூய ஆவியின் செயல் என்று எம் மதிப்பிற்குரிய பரிசுத்த தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் இந்த நம்பிக்கையின் ஆண்டில் அவர் வெளியிட்ட திருமடல் வழியாக தம்முடைய செய்தியை இறை மக்களுக்கு வெளிப்படுத்துகின்றார்.

திருச்சபையின் வரலாற்றிலும், பாரம்பரியங்களிலும் வரும் ஒவ்வொரு இறைவாக்கினர்கள், புனிதர்கள் நம்பிக்கை வாழ்விற்கு சிறந்த முறையில் அச்சாரமிட்டதனால் தான், இறைவல்லமை செயலூக்கம் பெற வழிவகுத்தது குறிப்பாக அன்னை மரியாள், புனித சூசையப்பர், இன்னும் புதிய ஏற்பாட்டில் வரும் அப்போஸ்தலர்கள் ஆகியோரது நம்பிக்கை, தம்மையே யேசுவின் அடிமைகளாக்கி அவரில் சரணடைந்த வாழ்வு வாழ்ந்தமையால் திருச்சபை இன்று நம்பிக்கையின் வேர்களில் ஊன்றி நிற்கின்றது. இந்த வகையில் இறை நம்பிக்கையை தன் வர்ழவின் பலமாகக்கொண்டு, இறைவனின் பிரியமுள்ள மகனாக தாழ்மையுள்ள அடியானாக வாழ்ந்த நம் மண்ணின் மைந்தன் தவத்திரு தந்தை தோமஸ் சுவாமி அவர்களின் புனித மிக்க வாழ்வுக்கு அச்சாணியாக விளங்கியதும் இந்நம்பிக்கையே. சிறுவயது முதல் "பரலோகத்தில் நமக்கு ஒரு அன்பான அப்பா இருக்கின்றார்" என்று உள்ளூர நம்பி அதிலே தன்னை முழுமையும் கையளித்து அப்பா அனுபவத்தை தன் வாழ்வின் ஒவ்வொரு அசைவுகளிலும் தனதாக்கிக் கொண்டார். இந்த மேலான நம்பிக்கை அனுபவமே தோமஸ் அடிகளாரை, நான் யார்?, இறைவன் யார்? என்ற கேள்விகளுக்கு ஆன்மீக ரீதியாக பதில் காண வைத்ததுடன், மனிதனுடைய ஒன்றுமில்லாமையை உணர்ந்து இறைமாட்சிமைக்கு முன் கையளித்து, அவரே எல்லா மாண்பும் வல்லமையும் பொருந்தியவர் நான் எல்லாப் பாவத்திற்கும் மடமைக்குமே உரியவன் என்ற உண்மையை தெளிந்து தெரிந்து கொண்டதுடன் அதைத்தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழத் தூண்டினார். எனது நம்பிக்கைக்கு ஆதாரம் இறைவனின் இரக்கமும் அவரது நன்மைத்தனமும் மட்டுமே என்பதை நம்பியவர் இறைவனில் மட்டும் தன்னைக் கையளித்து வாழ்வில் மலை போல வந்த துன்பங்கள், எதிர்ப்புக்கள், வருத்தங்கள், தோல்விகள் எல்லாவற்றிலும் இறைக் கரத்தைக் கண்டார். விசுவாசத்தைப் பாதுகாத்த செபவீரனாக, வாழும் புனிதனாக அன்றைய சமுதாயத்திற்குத் தோன்றினார். வரவிருக்கும் விண்ணக வாழ்விற்கு முன் அடையாளமாகத் திகழ்ந்தார். பலருடைய வாழ்விற்கு அவர் நற்செய்தியாக வாழ்ந்தார். இன்றும் பல மனித இதயங்களில் தோமஸ் சுவாமி மங்காத மாணிக்க விளக்காக எரிகின்றார். இப்பேற்பட்ட நம்பிக்கையின் வேர்கள் நம் திருச்சபையில் உருவாகிட வேண்டும் நம்பிக்கை நம் கிறிஸ்தவ வாழ்வில் புளிக்காரம் போல் இருக்க வேண்டும் என்றுதான் இவ்வாண்டு நம்பிக்கையின் வாயில் Door of Faith நம்மை சந்திக்கின்றது தந்தை தோமஸ் அவர்களின் விண்ணகப் பிறப்பின் 49வது ஆண்டை நினைவு கூரும் நாம் அப்பரிந்துரைவழி நம்பிக்கையின் ஏணிப்படியில் நாம் ஏறி எம்மை சூழவரும் இவ்வுலகத்தின் தேடல்களை, கவர்ச்சிகளை விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிகளில் மட்டும் மனதைச் செலுத்தி இறைவனை விட்டு தூர விலகும் மானிட சமுகத்தை பாதுகாக்க முயலுவோம். இதன் வழி நம் கத்தோலிக்க நம்பிக்கை மீண்டும் புத்தொளி பெற நாம் ஒன்றிணைந்து வெயல்படுவோம். இறைவனின் கைவன்மையை நம் வாழ்விலும் அனுபவிப்போம்.

## செபமாலை பக்தி தோன்றிய வரலாறு

செபமாலை என்பது செபம் + மாலை என்று பிரித்துப்பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளது. நம்முடைய செபங்கள் அனைத்தையும் சேர்த்து ஒரு மாலையாக நம் இறை அன்னை மூலம் இறைவனுக்கு சமர்ப்பிப்பதே செபமாலை ஆகும்.

### வரலாற்றின் வழியில்...



கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் பாலைவனத்தில் தங்களுடைய வாழ்க்கையை தியானத்திலும், செபத்திலும் ஊன்றியிருந்த துறவிகளே முதன் முதலில் செபமாலை பக்திக்கு அடிகோலியவர்கள். இறை இயேசுவின், இறை அன்னையின் மீது கொண்ட பக்தியின், பிரதிபலிப்பே செபமாலையாக உருவெடுத்தது. அவர்கள் உருவாக்கிய செபமாலை பக்தி தற்போதுள்ள செபமாலையின் பக்தியைப்போன்று அல்லாமல் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. அவர்களுடைய செபமாலையில் 500 மணிகள் கூட இருந்ததாக செய்திகள் கூறுகின்றன.

நமது இறை அன்னை 13ம் நூற்றாண்டில் புனித தோமினிக் அவர்களுக்கு அளித்த காட்சியில் செபமாலையை கொடுத்து அதனுடைய பக்தியை பரப்பச் செய்யுமாறு கேட்டுக் கொண்டதாக திருச்சபையின் பாரம்பரியமும் செவி வழிசெய்திகளும் குறிப்பிடுகின்றன. காலப்போக்கில் 500 மணி செபமாலை மறைந்து 150 திருப்பாடல்கள் அடிப்படையாகக் கொண்டு 150 மணிகளை கொண்ட செபமாலையாக உருவெடுத்தது. 14ம் ஆம் நூற்றாண்டில் இயேசுவை அல்லது மரியாவை குறிக்கும் வசனங்கள் திருப்பாடல்களின் முதலிலோ அல்லது முடிவிலோ இணைத்துச் சொல்லப்பட்டன. நாளடைவில் திருப்பாடல்கள் கைவிடப்பட்டு மரியன்னை அல்லது இயேசுவை குறிக்கும் வசனங்கள் மட்டும் செபிக்கப்பட்டன.

"அன்னையின் காட்சிகள் வழியாக இயேசு உலகில் தம் அன்னைக்குரிய இடத்தை வெளிப்படுத்துகிறார்"
*ரெனே லொரந்தான்.*

## செபமாலையின் வல்லமை

அது இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த காலம். கி.பி 1945ம் ஆண்டு ஆகட்ஸ் திங்கள் 6ம்நாள் காலை 8.45 மணிக்கு சக்தி வாய்ந்த அணுகுண்டு ஜப்பான் நாட்டு ஹிரோஷியா நகர்மீது வீசப்பட்டது நகரமே தரைமட்டமானது. பல இலட்சம் மக்கள் மடிந்து மண்ணோடு மண்ணாயினர். ஆனால் நகரின் மையத்தில் அமைந்திருந்த விண்ணேற்பு அன்னையின் ஆலயமும் அதனுள் இருந்தவர்களும் மட்டும் பாதுகாப்பாக இருந்தனர். "நாங்கள் செபமாலை செபித்துக் கொண்டிருந்தோம்" என்பதே உள்ளிருந்தவர்கள் சாட்சியாய் எல்லோருக்கும் சொன்ன வசனம்.

"தந்தை குடும்பத்தின் மூளை, தாயோ இதயம்"

## செபமாலையைப் பற்றி திருத்தந்தை – 2ம் ஜோன்பவுல்



"என் இளம் பருவம் முதற் கொண்டு இச்செபம் என் ஆன்மீக வாழ்வில் முக்கியதோர் இடத்தைப் பிடித்துள்ளது... என்னுடைய இன்பத்திலும், துன்ப நேரத்திலும் செப மாலை எனது துணைவனாக இருந் துள்ளது.

அதில் என் ஏராளமான கவலை களை ஒப்படைத்திருக்கின்றேன். அதில் நான் எப்போதும் ஆறுதல் பெற்றுள்ளேன்.... செபமாலை தான் நான் பெரிதும் விரும்பும் செபம்"

## சட்டம் ஓர் இருட்டறை

சட்டம் ஓர் இருட்டறை, சட்டம் ஒரு பார்வையற்ற பிறவி என்றெல்லாம் நாம் சொல்வதுண்டு. இப்படியொரு சொற்பதம் எப்படி உருவாயிற்று என்பதை நாம் நம்ப வேண்டும். சட்டத்திற்குக் கண் கிடையாது. அது காட்சிகளை மட்டுமே நம்பி தீர்ப்பை வழங்கும். அது கண்களைக் கட்டிக்கொண்டு தீர்ப்புச் சொல்லும் என்பது அதன் அர்த்தமல்ல. மாறாக அது பாரபட்சமின்றி தீர்ப்புச் சொல்லும் என்பதே உண்மையான பொருள். பல நாடுகளின் வழக்குமன்றங்களில் நீதிதேவதை ஒரு துணியால் தன் கண்களைக் கட்டிக்கொண்டு நிற்பதாக சிலை வைக்கப்பட்டிருப்பது இந்த அர்த்தத்திலேயே. மேலும் பண்டைக் காலத்தில் எகிப்தில் வழக்கு விசாரணைகள் வெளிச்சமில்லாத இருட்டறைகளிலேயே இடம்பெற்றன. நீதிபதிகள் வழக்கு விசாரணைக்கு மட்டுமே செவிமடுத்து தீர்ப்பை வழங்கவேண்டும். அவர்கள் குற்றம் சுமத்துபவர் மற்றும் குற்றவாளிகளின் முகத்தைப் பார்த்து அதனால் தீர்ப்பு பாதிக்கப்படக்கூடாது என்பதகே இந்த இருட்டறை ஏற்பாடு. இதையே சட்டம் ஓர் இருட்டறை எனக் கூறி வந்தனர்.

# நீதியில்லா விசுவாசமா?

## அருட் சகோ. ப. யோண்ஸ்ரனின் சோசை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

விசுவாசம் பற்றிய இன்றைய இறையியல் சிந்தனையில் சமூக நீதிக்கும் விசுவாசத்திற்குமுள்ள அடிப்படையான தொடர்பு பலராலும் எடுத்து நோக்கப்படுகின்றது. யேசு சொல்லாலும், வாழ்வாலும் அறிவித்த நற்செய்தி இறையரசு. இறையரசே யேசு கொண்டு வந்த நற்செய்தியின் மையமும் நிறைவுமாகும். இன்று இறையரசிற்காக உழைக்கும் கிறிஸ்தவனின் வாழ்வில் விசுவாசம், நம்பிக்கை அன்பு என்ற மூன்று பண்புகளும் மிளிர வேண்டும். இவ் இறையரசின் பொருட்டு மற்றவர்களிடமிருந்து யேசு வேண்டுவது தம் தனி வாழ்வில் அடிப்படையான மனமாற்றம். இம் மனமாற்றம் தன்னைப்பற்றியே நினைத்து தனக்காக வாழும் வாழ்வைத்துறந்து பிறருக்காக, பிறரோடு பகிர்ந்து வாழும் வாழ்வை மேற்கொள்வதாகும். இவ்வாறு பிறருக்காக வாழ்வதையே நாம் அன்பு என்று அழைக்கின்றோம். எனவே, அன்பே நற்செய்தியின் மையம் ஆகும். இறையரசிற்கு நாம் தரவேண்டிய பதில் அன்பினைக் கடைப்பிடிப்பதிலேயே அடங்குகின்றது.

அன்பினை எப்படி செயலாற்றுவதென்று நற்செய்திகளில் யேசு இரண்டு விதங்களில் எண்பிக்கின்றார். (I) ஏழைகள் மேல் யேசு காட்டிய பரிவும், இரக்கமும் (II) நீதிக்காக அவரின் உழைப்பு. ஆனால் நற்செய்திகளில் மிக அதிகமாக, தெளிவாக வெளிப்படுவது நீதி எனும் அவரது அன்பின் வடிவமேயாகும். யேசு துன்புறும் மக்களை அன்பு செய்கிறார். ஏழைகளுக்குத் நற்செய்தி அறிவிக்க வந்தேன் என முழங்குகின்றார். முடவர்கள், குருடர்கள், செவிடர்கள் யாவரும் வாழ்வின் முழுமையை அடைய முழுமூச்சாக உழைக்கிறார். மக்களின் உரிமையை பறிப்பேரை வன்முறையாக சாடுகின்றார். இவ்வாறு ஏழைகளோடு தன்னை ஒன்றித்துக் கொள்வதே அவரது பணியாக விளங்குகிறது. இதனால்தான் அவரின் மரணம் மனித குலத்தின் மீது அவர் கொண்ட அன்பின் விளைவு, தந்தையின் திட்டத்தை நிறைவேற்ற விழைந்ததின் வெளிப்பாடு என சொல்லலாம். ஆனால் அவர் வரலாற்றிலே நீதி எனும் வடிவத்திலே அவர் அன்பைச் செயலாற்றியதற்காவே கொல்லப்பட்டார். எனவே அன்பின் இந்த வடிவம் நற்செய்தியின் அடிப்படை அதுவே நீதி. யேசு அன்பை கடைப்பிடித்தவிதம் நீதிக்காக உழைப்பதிலேயே அடங்கியிருந்தது என்பது மட்டுமல்ல - நற்செய்தி வலியுறுத்தும் பல பண்புகளும் மதிப்பீடுகளும் நீதிக்காக உழைப்பவரின் வாழ்வில் இயற்கையாகவே மலர்கின்றன.

நீதிக்காக உழைப்பவன் துன்புறுத்தப்படுவோரை முதலில் தேர்ந்துகொள்ள வேண்டிய அவசியத்திற்கு ஆளாகிறார். அவர்களோடு ஒன்றித்து அவர்களது வாழ்வின் மறுமலர்ச்சிக்காக உழைக்கிறான். மனித வாழ்வின் அடிப்படை நலன்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறான். இத்தகைய அர்ப்பணத்தால் எழுகின்ற துன்பங்களைத் தாங்கிக் கொள்ளும் துணிவு பெறுகின்றான்.

எனவே அன்பின் மற்ற வெளிப்பாடுகளை வலியுறுத்துவதற்காக நீதியை விட்டுவிடுவது, இறையரசு - நற்செய்தியின் அடிப்படையை குலைப்பதாகும். விசுவாசத்தின் முழுமைக்கு நீதி இன்றியமையாதது. கடவுளின் அழைப்பிற்கு பதில் விசுவாசம் மட்டுமோ, நீதி மட்டுமோ அல்ல. இன்று இரண்டும் மனித வாழ்வின் இரு நிலைகளைச் சார்ந்தவை. எனவே நீதிக்கு இறுதி பொருள் தருவது விசுவாசம், விசுவாசத்தின் பொருளை உணரும் முறை நீதி. நீதி மலர்வதற்கு முழுமையான விசுவாசம் தேவை. ஆனால் விசுவாசத்தின் அமைப்பிற்கே நீதி தேவை. விசுவாசம் எழுவதற்கே நீதியைக் கடைபிடிப்பது அவசியம். நீதிக்காக உழைக்கும் போது மனித வாழ்வில் இன்றும் அதிக நீதி வரவேண்டும் என்றே உழைக்க வேண்டும். இறைவனின் வரம்பு கடந்த நிலையை நீதிக்காக உழைப்பதில் இவ்வாறு உணர, புரிந்து கொள்ள முடியும்.

வாழ்வைப் பகிர்ந்து கொள்ளுதல், வாழ்வை அளிப்பதற்காக, வாழ்வை இழக்கவே தயாராக இருத்தல் போன்ற நர்செய்தி அழைப்புக்கள் நீதிக்காக உழைப்பதை நேரடியாக அனுபவிக்கக்கூடிய உருவம் பெறுகின்றன. விசுவாசம் உண்மையானதா, பொய்யா எனக் கண்டுகொள்ள நீதி உதவுகிறது. அநீதியை அனுமதிக்கும் இறைவனை விசுவாசத்தையும், அநீதியையும் உலவவிடும் இறைவனை விசுவசிப்பது விசுவாசமாக இருக்க முடியாது. எனவே அநீதியை எதிர்க்காதவன் நீதியின் கடவுளை விசுவசிக்க முடியாது. வாழ்வில் காணப்படும் முரண்பாடுகள் விசுவாசத்திற்கு சவாலாக அமைகின்றன. நீதிக்காக உழைப்பவன் இதனை தெளிவாக உணர முடிகிறது. நல்லவர்கள், நீதிக்காக உழைப்போர் துன்புறுத்தப்படுகிறார்கள். வாழ்வைத்தர முனைபவனிடமிருந்து வாழ்வு பறிக்கப்படுகிறது. ஏழைகளுக்கு இறையரசு அறிவிக்கப்படும் இவ்வரசு எட்டாத் தொலைவிலிருப்பதாகவே தோன்றுகிறது. எனவே விசுவாசத்திற்குப் பெரும் சோதனையாக அமையக்கூடிய இந்நிலையினை நம் கண்முன் கொணர்வதன் மூலம் விசுவாசத்திற்கு உயிரளிக்க முடியும். எனவே நற்செய்தியின் முழுமைக்கு நீதி இன்றியமையாதது. நீதியில்லா விசுவாசம் வாழ்வற்ற விசுவாசம் என்பது வெள்ளிடை மலை.

# புனிதர்களின் பார்வையில் குருத்துவம்

ஆக்கம் :- அருட்சகோதரன் பா. றொசான்
(3ம் வருட இறையியல்)
புனித. சவேரியார் குருத்துவக்கல்லூரி, கொழும்புத்துறை.

திருச்சபை எமக்கு கற்பிக்கும் ஏழு திருவருட்சாதனத்திலே குருத்துவம் ஒரு விசேடமான, வித்தியாசமான திருவருட்சாதனமாகும். ஏனென்றால் இங்கு அருட்பொழிவு அல்லது அர்ச்சிப்பு (Conseration) இடம் பெறுகின்றது. அதைவிட இத்திருவருட்சாதனத்திற்கு மட்டுமே மற்றைய திருவருட்சாதனங்களுக்கு உயிரளிக்கின்ற சக்தி உண்டு. அதுமட்டுமல்லாது ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிவு என்ற வாக்குத்தத்தங்கள் எடுக்கப்பட்டு இயேசுவின் வாழ்வில் முழுமை நிலையை அமைத்து ஒரு கிறிஸ்தவனை மறுகிறிஸ்துவாக பிறக்கச் செய்கின்றது. இத்திருவருட்சாதனத்தை நிறை வேற்று அதிகாரம் கொண்டவரும், குருத்துவத்தின் முழுமை நிலையைக் கொண்டவருமான ஆயர் மட்டுமே வழங்க முடியும். குருத்துவம் அமைவது என்பது கடினமான காரியமாக இருந்தாலும் இது ஒரு புனிதம் நிறைந்த சடங்கு.

இன்றைய சூழ்நிலையில் குருத்துவம் எவ்வாறு பார்க்கப்படுகின்றது என்பதைப்பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு பக்கம் பார்க்கும்போது குருக்களின் வாழ்வும் பணியும் மக்களிலிருந்து அந்நியப்பட்டு, மக்களின் வாழ்க்கைக்கு அர்த்தம் தர இயலாததாக இருக்கின்றது. மற்றொரு பக்கமோ நுகர்வுக் கலாச்சாரம் மற்றும் நவீன மயமாக்கல் ஆகியவற்றால் தூண்டப்பட்டு மக்கள் பொருள்சார்ந்த உலகிலேயே நிறைவைக் காணத் துடிப்பதன் காரணமாக, ஆன்மீகத்திற்கான தேவை பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட, குருக்களும் தேவையற்றவர்களாக கருதப்படுகிறார்கள். ஆன்மீகம் புறந்தள்ளப்படும் இன்றைய சமுதாயத்தில் புனித இடங்களும், புனித செயல்பாடுகளும் தங்கள் அர்த்தத்தை இழந்துகொண்டிருக்கின்றன. இறையாசீரைப் பெற்றுத்தர குருக்கள் தேவையற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். ஏன் திருச்சபையுமே மக்கள் மத்தியில் தன் முக்கியத்துவத்தை இழந்து வருகின்றது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் பணிக்குருத்துவத்தின் மேன்மையையும் அவசியத்தையும் எடுத்துச்சொல்வது அவசியமான ஒன்று மட்டுமல்ல, அவசரமான ஒன்றும்கூட. இந்தப்பின்னணியில் புனிதர்களில் ஒருசிலர் இந்த பணிக் குருத்துவத்தை எப்படிப் பார்த்திருக்கின்றார்கள் என்பதைப்பறறி ஆராயலாம் என நினைக்கின்றேன்.



பணிக்குருத்துவமும் கிறிஸ்துவும் பிரித்துப்பார்க்கப்பட முடியாது என்பதை குருத்துவத்தைப்பற்றிய புனிதர்களின் பார்வையாக இருக்கின்றது. "நான் செல்லும் வழியில் ஒரு வானதூதரையும், குருவானவரையும் சந்திக்க நேர்ந்தால் முதலில் குருவானவருக்குத்தான் வணக்கம் செலுத்துவேன். காரணம் வானதூதர் கடவுளின் பணியாளர்தான். ஆனால் குருவானவரோ கிறிஸ்துவின் இடத்தில் இருப்பவர்" என்ற புனித பிரான்சிஸ் அசிசியாரின் வார்தைகளில் இவ்வுண்மை பிரதிபலிக்கின்றது. குருக்களின் பாதுகாவலராகிய புனித ஜான் மரிய வியான்னி "கடவுளின் இடத்தில் இருந்து கடவுளின் எல்லா வல்லமைகளாலும் நிரப்பப்பப்பட்ட ஒருவரே குருவானவர் எனக் கூறுகிறார்.

அருளாளர் அன்னை திரேசா குருத்துவத்தின் மேன்மையை கூறுகையில் "தன் ஒரே பேறான மகனையே அனுப்பும் அளவுக்குக் கடவுள் இவ்வுலகை அன்பு செய்தார். அதே கடவுள் இன்றும் உலகின் மீது தான் கொண்டுள்ள அன்பின் காரணமாக குருக்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார். எனவே கடவுளிடம் விளங்கும் அன்பின் அடையாளமே குருத்துவம். மனித குலத்தின் மீதான கடவுளின் ஒளிச்சுடரே குருவானவர். புனித ஜான் மரிய வியான்னி இன்னும் கூறுகையில் "திருமுழுக்கின் வழியாக கடவுளின் வாழ்வுக்கு உங்களை அறிமுகப்படுத்தியவர் யார்? குருவானவரே! ஒப்புரவு அருள் அடையாளத்தின் வழியாக நம் ஆன்மாவைத் தூய்மைப்படுத்திக் கடவுளின் முன் நம்மைத் தூயவர்களாக நிறுத்துபவர் யார்? குருவானவரே! எனவே கடவுளிடமிருந்து வரும் அருளை எண்ணிப்பார்க்குபோது, குருத்துவத்தையும் நம்மால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது." இன்னும் ஆழமாக எண்ணுகின்ற போது, மற்ற அருளடையாளங்களைவிட நற்கருணை என்னும் அருளடையாளமே குருத்துவத்தின் மேன்மை மற்றும் உயர்வுக்குமான நேரடிக்காரணமாக அமைகின்றது. இயேசுவைப் பிரசன்னப்படுத்தும் நற்கருணையை ஏற்படுத்தும் உரிமையையும், கொடையையும் குருக்கள் பெற்றிருப்பதே, குருத்துவத்தின் மேன்மைக்கான காரணம் என்பதே புனிதர்களின் புரிதலாக இருக்கின்றது.

குருக்களை நோக்கி எழுதப்பட்ட கடிதத்தில் காணப்படும் புனித அசிசியாரின் கீழ்கண்ட வார்த்தைகள் இதை மெய்ப்பிக்கின்றன. "என் சகோதரர்களே! எனக்குச் செவிசாயுங்கள். கன்னி மரியா, தன் உடலின் இயேசுவைச் சுமந்ததன் காரணமாக போற்றப்படுகிறாள் என்றால், இயேசுவின் உடலை தன்னகத்தே சில நாட்கள் கொண்டிருந்த கல்லறை மக்களால் பெரிதும் மதிக்கப் படுகிறது என்றால் அதே இயேசுவை தன் கையால் தொடுகின்ற மற்றவர்களுக்குத் தருகின்ற ஒருவர் எவ்வளவு புனிதமானவராகவும், தகுதியானவராகவும் இருக்க வேண்டும்!" புனித பெர்னார்ந்து இதே கருத்தனை இன்னொரு கண்ணோட்டத்தில் தருகிறார். "குருத்துவம் இல்லாத இடத்தில் நமதாண்டவரும் இருக்க முடியாது. காரணம் மக்கள் மத்தியில் கிறிஸ்துவைப் பிரசன்னப்படுத்துபவர் குருவானவரே" என்கிறார்.

புனித ஜான் மரிய வியான்னி இவ்வாறு எழுதுகிறார். "திருத்தூதர்கள் உயிர்த்த ஆண்டவரைப் பார்த்த பொழுது எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்களோ, அதே மகிழ்ச்சியை ஒவ்வொரு குருவும் திருப்பலியில் இயேசுவை ஏந்தும்பொழுது பெற வேண்டும். இயேசுவின் திருவுடலையும், திரு இரத்ததையும் தாங்கும் குருக்களின் கைகள், குழந்தை இயேசுவைத் தாங்கிய மரியன்னையின் கைகளை விட மேலானவை அல்லவா?"

சிறந்த இறையியலாளர் புனித தோமஸ் அக்குவினாஸ் கூறுகையில் "கிறிஸ்துவின் மறுஉருவான குருவானவர், கிறிஸ்துவைப் போல உலகின் மீட்புக்காக தன்னைக்குருவாகவும் பலிப்பொருளாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டும். இதுவே ஒரு குருவானவரின் செபத்திற்கும், செயல்பாடுகளுக்கும், உரையாடலுக்கும் உரைக்கல்லாக இருப்பது தன்னையே நாள்தோறும் பலியாக ஒப்புக் கொடுப்பதற்கே ஒரு குரு அழைக்கப்பட்டுள்ளார்." புனித பெரிய கிரகோரியார் இன்னும் ஒருபடி மேலே சொல்கிறார். ஒரு குருவின் வாழ்வு எத்தகையதாக இருக்கவேண்டும். என்பதை கூறுகின்றார். "திருப்பணியாளர் சிந்தனையில் தூய்மையயுள்ளவராகவும், செயல்பாட்டில் முன்மாதிரிகை உள்ளவராகவும், அமைதி காப்பவராகவும் பயனுள்ள சொற்களையே சொல்பவராகவும் இருத்தல் வேண்டும். எல்லோர் மேலும் இரக்கம் காட்டுபவராகவும் குறிப்பாக தியான மனநிலையில் வாழ்பவராகவும் இருத்தல் வேண்டும் நீதியான அடிப்படையில் பாவிகள் இழைக்கும் பாவத்தின் எதிரியாய் இருத்தல் வேண்டும்.

அவர் புறபணிகளால் அகவாழ்வை உதாசினப்படுத்துபவராகவோ அல்லது அகவாழ்வின் அமைதிக்காக புற வாழ்வின் கடமைகளை உதறித் தள்ளுபவராகவோ இருத்தல் கூடாது."

எனவே குருத்துவ வாழ்வு என்பது மக்களுக்குப் பணி செய்ய கடவுள் அளிக்கும் கொடை. இறைதிட்டத்தின்படி மக்களுக்குப் பணிசெய்யும்போது அதுவே இறை பணியாகவும் மாறுகின்றது. குருத்துவம் இயேசுவின் தொடர் பிரசன்னத்தை உலகிற்குக்காட்டுகிறது. குருக்களும் மக்களும் குருத்துவத்தின் மேன்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படி செய்கையில் உலக வரலாற்றில் இறைவன் விரும்பிய மீட்புத்திட்டம் தொடரும் என்பதில் ஐயமில்லை.

# ஓரங்கள் மையமாகட்டும்

P. சார்லஸ் தயாளன் கூஞ்ஞ
தூய சவேரியார் குருத்துவ கல்லூரி.

"மாற்றம்" அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தன் முதலாவது தேர்தல் பிரச்சாரத்தின்போது பயன்படுத்திய தாரகமந்திரம். மாற்றம் என்பது சகலருக்கும் பொதுவான ஒன்று ஒவ்வொரு மனிதனும் நாளாந்தம் மாற்றத்திற்கு உட்பட்டுக் கொண்டே இருக்கின்றான். புதிய சிந்தனைகள் உருவாகும் போது புதிய தொழில்நுட்பம் வளர்ச்சியடையும் போது, புதிய சமூக சூழல் உருவாகும்போது தனிமனிதனின் வாழ்வும், குடும்ப, சமூக வாழ்வும் மாற்றம் பெறுகின்றன. இதனால் தாங்கள் கட்டிக்காத்துவந்த மரபுகளும் சம்பிரதாயங்களும், மாற்றம் எனும் அலையிலே அடித்து செல்லப்படுவதும், புதிய புதிய வழிமுறைகள் உருவாகுவதும் வரலாறு எடுத்துக் கூறும் பாடம் ஆகும். ஏனெனில் மாற்றம் காலத்தின் கட்டாயம்.

இந்த மெய்யியலின் அடிப்படையில் திருச்சபையிலும் மாற்றம் காலத்தின் கட்டாயமும் காலத்தின் தேவையுமாகும். பல நூறு ஆண்டுளாக திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் ஓரங்கட்டப்பட்டு இரண்டாம் தர குடிகளாக நடத்தப்பட்டவர்கள் பொதுநிலையினர். இதனால் திருச்சபையின் அதிகார அமைப்பில் மட்டுமல்லாது பல்வேறு பணிகளிலும் பொதுநிலையினர் ஈடுபாடின்றி ஒதுங்கியே வாழ்ந்தனர். இறுக்கமான நிறுவன அமைப்பாலும் அதிகாரம் செலுத்திய திருஆட்சியாளர்களின் செயற்பாட்டாலும் முகவரி இழந்து ஓரம்கட்டப்பட்ட நிலைக்கு சென்ற பொது நிலையினரின் உண்மையான நிலையை கோடிட்டுக் காட்டி அவர்களின் வாழ்வு, பணி, கடமை, உரிமை என்பவற்றை தெளிவுப்படுத்தி அவர்களை திருச்சபையின் மைய நிலைக்கு அழைததுவர அத்திவாரம் இட்டது 2ம் வத்திக்கான் சங்கம்.



சங்கம் தன் சங்கநாதத்தை எழுப்பி ஐபத்து ஆண்டுகள் ஆகிவிட்டன ஆயினும் சங்க அறிவுரை ஏதோ காலம்கடந்த அறிவுரையாக இன்றும் இருக்கின்றது. திருச்சபை இன்றும் நிறுவன அமைப்புக்குள்ளும், ஆட்சி அதிகாரகட்டுக்குள்ளும், தன்னுடைய இறுக்கமான பிடிகளை இன்னும் முழுமையாக தகர்த்தாமல் இருப்பது வெள்ளிடைமலை. இன்றும் எம் நாட்டில் பொது நிலையினர் 2ம் தர குடிகளாக திருச்சபையின் செயற்பாட்டில் ஈடுபாடின்றி ஒதுங்கி இருப்பதும், திருநிலையினர் அவர்களை சேவகர்கள் போல் நடத்துவதும் வெட்கத்துக் குரியவை யாகும்.

மேலும் திருச்சபை தன்னை ஒரு மாபெரும் நிறுவனமாக புரிந்து கொள்வதால் தூய ஆவியின் ஆற்றல், அருங்கொடை, உடனிருப்பு என்பவற்றை முன்னிலைப்படுத்த தவறியது இதனால் பொது நிலையினரின் பணியும் தலைமைப் பண்பும் ஓரங்கட்டப்பட தொடங்கியது. திருமுழுக்கு பெற்று கிறிஸ்துவின் அரச குருத்துவ திருக்கூட்டத்தில் இணைக்கப்பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் பிரதிநிதி என புரிந்துகொள்வதை விடுத்து திரு ஆட்சியில் உள்ள பாப்பரசர் ஆயர்கள் குருக்கள் தான் கிறிஸ்துவின் பிரதிநிதிகள் என தவறாக புரிந்துகொண்டதினால் மறு கிறிஸ்துவாக மாறவேண்டிய பொதுநிலையினர் போலிக் கிறிஸ்தவர்களாக வாழ்கின்றனர்.

பொதுநிலையினர் பற்றி விவாதங்கள் கலந்துரையாடல், கருத்தரங்குகள் நடத்தப்பட்டாலும் இதனால் மேலோட்டமான ஒரு சில மாற்றங்களே எற்படுகின்றதே தவிர உண்மையான கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் இதுவரை ஏற்படவில்லை. இவர்களில் பலர் வெறும் ஆலய வழிபாடுகளோடு தம்மை நிறுத்திக்கொள்கின்றனர், திருச்சபை ஆற்றுகின்ற சமூக பணி பற்றி சற்றும் சிந்தனை இல்லாமல் சடங்கு ரீதியாக ஆலயம் வந்து போகின்ற பொதுநிலையினராக உள்ளனர். இன்னும் சிலர் திருச்சபையை விமர்சிக்கின்றதை மட்டுமே குறிக்கோளாக கொண்டு முன்வருகின்ற பொதுநிலையினரை கண்ணோட்டமின்றி அழிவுக்கு இட்டுச்செல்லும் போக்கில் விமர்சிப்பவர்களாக உள்ளனர். இன்னும் பலர் பெயர் அளவில் மட்டும் கிறிஸ்தவர்களாக வழிபாடுகளில் கூட பங்கு பெறாதவர்களாக உள்ளனர்.

சங்கம் கண்ட திருச்சபை மலரவேண்டுமாயின் ஓரம்படுத்தப்பட்ட பொதுநிலையினர் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும் இதை அழுத்திப்பிடித்துள்ள ஆயர்களும், குருக்களும், துறவிகளும் அதிகார பிடியில் இருந்த, நிறுவனப்பார்வையில் இருந்து விடுதலை பெற வேண்டும். பொதுநிலையினருக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து, அச்சமின்றி பொறுப்புக்களை பகிர்ந்து கொடுத்து அவர்களோடு இணைந்து செயல்பட வேண்டும் அப்போது இம்மண்ணில் உண்மையான இறையாட்சியை வேரூன்ற செய்ய முடியும்.

சங்கம் முழங்கிய நாதம் வெறுமனே செவிடன் காதில் ஊதிய சங்காக இல்லாமல் இந்த ஐம்பதாவது ஆண்டிலாவது எட்டுத்திக்கிலும் எதிரொலித்து ஓரங்கட்டப்பட்ட பொது நிலையினரை முன்னிலைப்படுத்தி ஈடுபாட்டோடு பங்கேற்கும் பொது நிலையினரை உருவாக்கி திருச்சபையில் மட்டுமல்லாது சமுதயத்திலும் புதுவுலகம் படைக்கும் மாபெரும் சக்தியாக உயிர்த்தெழ செய்வோம்.

# விசுவாசத்தின் தீபமாகும் நாம் — உலகினிருளினைப் போக்கவே

[இது திருப்பாலர் சபை ஞாயிறு என்ற போதிலும் என்னுடைய செய்தி வளர்ந்தோருக்கே]

உயிருள்ள இறைவனின் மகன் இயேசு இவ்வுலகின் படைப்பாளி. முதல் பெற்றோரின் பாவத்தால் சூழப்பட்ட உலகின் இருளினை வெற்றிக்கொள்ள வந்த ஒளி. "நானே உலகின் ஒளி. என்னை பின்தொடர்பவர் இருளில் நடக்க மாட்டார். வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியை கொண்டிருப்பார்" (யோவான் 8:12), எனும் வசனம் மேல்கூறப்பட்டதை உறுதிப் படுத்துகின்றது. மீண்டும் அவர் கூறுகின்றார். "என்னிடம் நம்பிக்கைக் கொள்பவர் இருளில் இராதபடி நான் ஒளியாக உலகிற்கு வந்தேன்" (யோவான் 12:46). இவ்வசனத்தின் மூலம் இந்த முழு மனித குலமும்.'. உலகமும் மனித பாவத்தால் இருளடைந்துள்ளது, அதை மீட்டு மீண்டும் ஒளிரச் செய்ய எம் இரட்சகர் ஆண்டவருக்கு மட்டுமே முடியும். ஒளியின் இறைவன் இல்லையெனில் நாமும் ஒளியின் மக்களல்ல, மாறாக இருளின் மக்களாவோம். அவரன்றி இப்பூவுலகு முழுவதுமே இருள்மயமாய் இருக்கும் என்பதை நசும் உணர்கின்றோம்.

இவ்வுலகை ஒளியால் நிரப்பும் ஆண்டவர் தன்னை பின்பற்றுவோரிடம் தன் பணியை கையளித்தார். "நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்... இவ்வாறே உங்கள் ஒளி மனிதர் முன்.ஒளிர்க!. அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையை போற்றிப்புகழ்வார்கள்" (மத்தேயு 5:14,16)" என்று இயேசு கூறுகிறார். ஆகவே அவரை பின்பற்றுபவர் என்ற முறையில் எமக்கும் ஒரு பணி உண்டு. அது என்னவெனில், எம் வாழ்வையும் உலகையும் இறை கிறிஸ்துவின் ஒளியால் மிளிரச் செய்து இருள் சூழ்ந்த உலகையும் அதில் வாழும் மக்களையும் ஒளியால் நிரப்புவதேயாகும். இதுவே கிறிஸ்துவை பின்பற்றும் இளையோர் மற்றும் முதியோர், ஆண் மற்றும் பெண் மற்றும் சிறுவர்களாகிய எம் அனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும். எனவே அனைவரும் கைகோர்த்து இவ்வுலகை பூரணப் படுத்துவோம். விசுவாச ஆண்டான இவ்வாண்டு எம்மை இப்பணிக்கு ஊக்கப்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனவே இச்சந்தர்ப்பத்தை பயனுள்ளதாக்கி விசுவாசத்தின் ஒளியால் சக்தி பெற்று உண்மைக் கிறிஸ்தவர்களாக உலகின் இருளினைப் போக்க முன்செல்வோம்.

கடந்த வருடம் 2012ல் இலங்கையில் திருப்பாலர் சபை தொடங்கி 25வது வருட வெள்ளிவிழாவை கொண்டாடினோம். கடந்த 25 வருடங்களாக எமது சிறிய மறைதூதர்கள் தமது திருப்பாலர் சபை கீதத்தில், "விசுவாசத்தின் தீபமாகும் நாம் உலகினிருளைப் போக்கியே" எனும் வசனத்தை பாடி வந்தார்கள். இதுவே திருப்பாலர் ஞாயிறு தினம் மற்றும் முழு ஆண்டிற்குமான கருப்பொருள். அவர்கள் கிறிஸ்துவின் சிறிய மறைதூதர்களாக தம் பணியை மேற்கொள்வதற்கு நாம் எந்தளவிற்கு ஊக்கப்படுத்தியுள்ளோம்? உலகின் ஒளியான கிறிஸ்துவை சுற்றி அவர்கள் எப்போதும் செல்ல நாம் அவர்களுக்கு வாய்ப்பளித்துள்ளோமா? அல்லது எமது போதிய புரிந்துணர்வுயின்மையாலும் எம் சுய விருப்பங்களை அடைய விரும்புவதாலும் எமக்கு இறைவன் கொடுத்த இவ்வன்புச் செல்வங்கள் இறை ஒளியால் தம் வாழ்வால் நிறைவுபடுத்திக்கொள்ளும் சந்தர்ப்பத்தை விலக்கியுள்ளோமா? எமது மதிநுட்பமில்லா நிலையால் நாமும் இருளின் தூதர்களுக்கு உதவி, எம் சிறு குழந்தைகளின் பெறுமதியான வாழ்வை இருளில் புதைத்துள்ளோமா?

**அருட்பணி. ரெஜினோல்ட் சபரமாது**
**தேசிய இயக்குனர்**
**திருப்பாலர் சபை.**

"சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களை தடுக்காதீர்கள் (மாற்கு 10:14)" எனும் எம் தலைவரின் வார்த்தைகளை தொடர்ச்சியாக எம் இதயங்களிலும் எம் எண்ணத்திலும் எதிரொலிக்கச் சொய்வோம். இவ்வழைப்பை ஏற்போம். எம் குழந்தைகளை திருப்பாலர் சபை அங்கத்தினர்களாக மாறுவதற்கு ஊக்கமளிப்போம். அவர்கள் உண்மை ஒளியான கிறிஸ்துவை சுற்றியிருக்க உதவுவோம். அப்பொழுது அவர்கள் இறை இயேசுவின் ஒளியால் நிரப்பப்பெற்று உலகைச் சூழ்ந்துள்ள இருளை அகற்ற முடியும்.

**"விசுவாசத்தின் தீபமாகும் நாம்**
**உலகினிருளைப் போக்கபோக்கவே"**
**இறையாசீரும் மரியன்னையின்**
**பாதுகாவலலும் உரித்தாகுக!**

# சமுதாய அக்கறைக்கான கல்வி

## வளரும் பருவத்தில் உள்ள மாணவ மாணவிய சமுதாய அக்கறைக்கான கல்வி பெறச் செய்வோம்



■ எப்படி?

மானிட உரிமைக் கல்வி, பாலியல் கல்வி, நீதியான அமைதி கல்வி, சுற்றுச்சூழல் கல்வி, சமுதாயப் பகுப்பாய்வு கல்வி, பெண் விடுதலைக்கல்வி, மதிப்பீட்டுக் கல்வி... போன்றவைகளின் வழியாக...!

■ மேலும்,

பள்ளியினைச் சுற்றி வாழுவோர் மத்தியில் முறைசாராக் கல்வி, வீதி நாடகங்கள், எழுத்தறிவு, மாலை வகுப்புகள், ஆற்றுப்படுத்தும் அமர்வுகள், கிராமங்களைத் தத்தெடுத்தல்... போன்ற புதுப்புது முனைப்புகளை மாணவச் சமுதாயம் மேற்கொள்வதன் வழியாக...!

■ இன்னமும்,

குழுப்பணிகள், கூட்டுறவு முயற்சிகள் வரம்புகளைக் கடந்த சமூக வாழ்வுமுறைகள், படைக்கப்பட்ட அனைத்தின் அனைத்து உரிமைகளுக்கான சேவைகள் முன்னாள் மாணவ மாணவியர்களின் தொழில் முன்னேற்றங்களில் பங்கெடுப்புகள் போன்றவைகளின் வழியாக...!

"நற்செய்தியின் ஒளியில்
செயல்மிகு உத்வேகத்துடன்
புதியதொரு மனப்பாங்குடன்
ஏழையர் ஆழ்ந்த அக்கறையுடன்
சமுதாய மாற்றத்திற்கான வேட்கையுடன்
அநீதிகளைத் தட்டிக்கேட்கும் ஆவேசத்துடன்
விடுதலையைக் கொண்டுவரும் இலட்சியத்துடன்
வாழும் வண்ணமாக
வளரும் இளம் தலைமுறைகளை வார்த்தெடுக்கும்..
கல்வியே நமக்குத் தேவை..!
புத்துலகு சமைத்தெடுக்கும்
புரட்சிமிகு மாணவ மாணவச் சமுதாயமே
இன்று நமக்குத் தேவை....!"

*பேதுரு அருப்பே*

■ "பல்கலைக்கழகங்கள் நன்றாக செயல்படும்போது, தேசமும் நன்றாக செயல்படும்..." என்றார் ஜவஹர்லால் நேரு. இதனை முன்வைத்துச் செயல்பட்டு வரும் நமது கத்தோலிக்கக் கல்லூரிகளுக்கு இன்று நாட்டில் ஒரு தனிப்பட்ட மதிப்பு உண்டு.

■ நம் கல்லூரிகளில் மாணவ மாணவியர் சேர்ப்பு... செய்வதிலிருந்து விழிப்புணர்வுக்கான ஈடுபாடுகள் வரை ஒரு மரியாதைக்குரிய வழிமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. இன்னமும் இவைகளை முடுக்கி விடலாம்!

■ எப்படி?

01. பண்பாடுகளைக் குறித்த திறந்த - அதே சமயத்து கணிப்புடன் கூடிய அணுகுமுறைகளை நமது கல்லூரி மாணவச் சமுதாயம் பெறுவதன் மூலமாக...

02. ஏழை மாணவ மாணவியர்களைச் சேர்த்து அவர்களின் முழு விடுதலைக்கும், நிறை வாழ்வுக்கும் முனைப்புகளை மேற்கொள்வதன் மூலமாக...

03. காலத்தின் அருட்குறிகளின் அடிப்படையில் பாடத்திட்டங்கள், போதனா முறைகள், ஆய்வுக்கான செம்பொருள்கள் கண்டுபிடிப்புகள்... ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலமாக...

04. விசுவாசப் பயணத்தில் வேரோட்டமான விவரங்களையும், விவேகங்களையும், விளக்கங்களையும் வழங்குவதன் மூலமாக...

- **உயர் கல்வி நிறுவனங்களுக்குள் நுழைந்தறியாத ஏழை எளிய மக்கள் பிரிவினர் வழங்கும் வரி வருவாய் மூலம்தான் உயர் கல்விக்கான நிதி பெருவாரியாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால் -**

- **80% பயனாளிகள் நகரப்புறங்களிலிருந்து வரும் 80% வருமான வசதிமிக்க உயர்மட்டத்தவர்களே...! கல்வி வாய்ப்புக்களைச் ஜனநாயப்படுத்துவது மிகக்குறைந்த அளவில்தான் நிகழ்ந்துள்ளது.**

- **பல்கலைக்கழகக் கல்வி நெருக்கடியில் சிக்கியுள்ளது. இது மூலவளப்பற்றாக்குறையால் அல்ல தரத்தில் ஏற்பட்டு வரும் தாழ்வு நிலையால்...!**

### முறைசாராக் கல்வி

1978ஆம் ஆண்டு முதல், கத்தோலிக்கத் திருச்சபை முறைசாராக் கல்வியில் ஈடுபாடு கொண்டுள்ளது. இதனை மென்மேலும் முடுக்கிவிட விழைகிறது.

01. **கல்வித் துறையில் :**
திறந்த பள்ளி, இரவுப்பள்ளி, படிப்பை நிறுத்திக்கொண்டோருக்குப் பட்டயக் கல்வி.

02. **சுகாதாரத் துறையில் :**
நோய் தடுப்புக் கல்வி, பாரம்பரிய - இயற்கை மருத்துவக் கல்வி, எய்ட்ஸ் தடுப்புக் கல்வி, எயிட்ஸ் - தொழுநோய் இவைகளால் பாதிப்பட்டுள்ளோருக்குச் சிறந்த அக்கறையுடன் ஆற்றுப்படுத்தும் கல்வி.

03. **மகளிர் நலத்துறையில் :**
குடும்ப வாழ்வுத் திறன்கள், தொழில் திறன்கள் போன்றவைகளின் மூலமாக, பெண்களுக்கான உரிமைக் கல்வி, இயக்கக் கல்வி.

04. **தொழில் கல்வித் துறையில் :**
வேலைவாய்ப்புக் கல்வி, சமுதாயக் கல்லூரிகள் தொழில் கல்லூரிகள்.

05. **மேலும், உடல் - உள ஊனங்களால்** பாதிக்கப்பட்டோருக்கான சிறப்புக் கல்விகள்

06. மது போன்ற போதனைகளிலிருந்து வெளிவர விடுதலைக் கல்வி

07. சிறைப்பட்டிருந்தோருக்கான மறுவாழ்வுக் கல்வி

08. சமூகங்கள் மத்தியில் சமரசம் - அமைதி - நீதிக்கல்வி

**"திறமைசாலியான ஓர் ஆசிரியரிடமிருந்து**
**ஒரு மோசமான மாணவன்**
**கற்றுக்கொள்வதைவிட,**
**அதிகமாக**
**ஒரு மோசமான ஆசிரியரிடமிருந்து**
**ஒரு நல்ல மாணவரால்**
**கற்றுக் கொள்ள முடியும்..."**

*- அப்துல் கலாம்.*

# பாடம் தந்த சோதனைகள்

நீளம் தாண்டுதலில் நான்கு முறை தொடர்ச்சியாக ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற முதல் வீரர் கார்ல் லூயிஸ் என்பவர். 1996ஆம் ஆண்டில் 8.5 மீட்டர் தாண்டி நான்காவது முறை தங்கப் பதக்கம் வென்றார். அவரது பேட்டியில் கவனிக்க வேண்டியது: எனது வாழ்க்கையில் இப்போது வென்ற தங்கப் பதக்கம் மிகவும் முக்கியமானது. 1989 முதல் நாள் தொடையில் தசை வலியால் அவதிப்பட்டேன். ஆயினும் பதக்கம் வெல்ல வேண்டும் என்ற ஒரே நோக்கில் வலியையும் மீறி தினமும் உடற்பயிற்சி செய்தேன். இடைப்பட்ட ஏழு ஆண்டுகளில் உடல்வாகு, உணவுத்திட்டம் மற்றும் கடுமையான உழைப்பு என்ற இந்த மூன்று விஷயங்களிலும் மிகவும் கவனமாக இருந்தேன். வெற்றியும் பெற்றேன்" என்று விளக்குகிறார்.

ஒவ்வொரு மனிதரின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு அர்த்தமுள்ள வரலாறு அடங்கியுள்ளது. யாரும் முதல் முயற்சியிலேயே சாதனை படைப்பதில்லை. வெற்றியாளர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பதன் மூலமும், அவர்களுடன் உரையாடுவதன் மூலமும் நாமும் உத்வேகம் பெற முடியும். இவ்வுலகம் தொடர்ந்து இயங்குவது சாதனையாளர்களின் வழிகாட்டுதலால்தான்.

*எவ்வளவு கற்றாலும், எவ்வளவு அறிவு படைத்தாலும் பிறர் சொல்லும் அறிவுரையைச் சிந்தித்தல் நலந்தரும்.*
*- சுவாமி இராமதாசர்.*

# உந்து சக்தி

ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியையும், வெற்றியையும் பெற உந்து சக்தி மிகவும் தேவையான ஒன்றாகும். அவர் தன்னிடமுள்ள உந்து சக்தியால் வெற்றியை எளிதில் பெறுகிறார். இந்தச் சுய உந்து சக்தியானது இரண்டு பரிமாணங்களைக் கொண்டது. ஒன்று தன் மனதைச் சார்ந்தது. அது நாம் எதிர் காலத்தில் என்னவாக வேண்டுமென்பதைக் குறிக்கிறது. மற்றொன்று செயல் பற்றியது. இது எப்படிச் செயற்பட்டால் நாம் அக்காரியத்தைச் செய்து முடிக்க முடியும் என்பதைத் தீர்மானிப்பது. ஆதலால், சுய உந்துதல் உள்ள மனிதர் எக்காரியத்திலும் ஒரு நோக்கத்தை வைத்துக் கொண்டு, அதன்படி செயற்பட்டு வெற்றி பெறுகிறார்.

உந்துதல் உடையவர் எதிலும் நேர்மறையாகவே சிந்திக்கிறார். ஓர் இலட்சியத்தை ஏற்படுத்திக்கொண்டு தரமான வழிமுறையோடு, செல்ல வேண்டிய இடத்தைச் சென்றடைய வேண்டும். உந்து சக்தி உடையவர், தனக்கென்று நடத்தை முறைகளை வைத்துக்கொண்டு, சமுதாயத் தேவையை பூர்த்தி செய்ய உழைக்கிறார். அவர் தன் மனதைக் கட்டுப்படுத்தி நல்ல வழிமுறையோடு செயல்பட்டு வெற்றியும் மகிழ்ச்சியும் பெறுகிறார்.

சுற்றுப்புறச் சூழல்களுக்கேற்ப, நம் மனம் நம்மைச் செயல்படத் தூண்டுகிறது. அதுவே உந்து சக்தி ஆகும். நம் மனதில் உருக்கொள்ளும் எண்ணத்தில் நம்பிக்கை வைத்து, அதைச் செயல் ஆக்கம் செய்வது நம்முடைய மனமே. எனவே, நம் மனதைச் சிந்தித்துச் செயல்பட வைக்க, நாம் மேற்கொள்ளும் பணிக்குத் துணையாக இருக்க, நாம் சில பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

- ✶ நம்மால் முடியும் என்று நம்புவது
- ✶ நல்லவற்றைச் சிந்திப்பது
- ✶ நம் அறிவைப் பயன்படுத்துவது
- ✶ எதிர்மறையாகச் சிந்திப்பதைத் தவிர்ப்பது
- ✶ பொறுமையாக இருப்பது
- ✶ எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பது
- ✶ தவறுகளை மறந்துவிடுவது
- ✶ நம் மனதைப் புதிய மாற்றுச் சிந்தனைக்குத் திருப்புவது

நம் வாழ்கை நிலை முன்னேற நாம் எப்போதும் மகிழ்சியாக இருக்க, சாதனைகள் புரிய முடியாத காரியத்திலும் முயற்சி செய்ய, நமக்குச் சுய உந்துதல் தேவை. உந்து சக்தி பெற நமக்குத் தன்னம்பிக்கை அவசியம்.

## நம் மனதைச் செம்மைப்படுத்த இன்னும் சில வழிமுறைகள்

- ✧ நேர்மறையாகச் சிந்திப்பது
- ✧ எக்காரியத்திலும் நம்முடைய முழுத் திறமையைப் பயன்படுத்துவது
- ✧ இலக்கை நிர்ணயித்துக் கொண்டு அதைக் குறித்தே சிந்திப்பது
- ✧ முற்போக்கு எண்ணங்களை வளர்த்துக் கொள்வது
- ✧ இலட்சியத்தை அடைய என்ன விலை கொடுக்கவும் தயாராக இருப்பது
- ✧ ஆற்றலை முழுவதுமாக நம்புவது முதலியன.

### தன்னை நம்புதல்

ஒருவர் தன்னை நம்புவதுதான் தன்னம்பிக்கை பெற முதல் வழி. தன்னிடம் நம்பிக்கை இல்லாத போது அவர் நல்லதை விடுத்து எதிர்மறையாகச் சிந்திக்கத் தொடங்குகிறார். எதையும் நேர்மறையாகப் பார்க்கும் எண்ணமே, எதிலும் முன்னேற நமக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.

தன்நம்பிக்கையால்தான் ஒருவருக்கு மிகப் பெரிய உந்து சக்தி கிடைக்கிறது. அதன்மூலம் அவர் செய்யும் காரியங்களில் ஒரு பொறுப்புணர்வும் பெறுகிறார். பொறுப்புணர்வு மிக்கவர்கள் எப்போதும் ஆக்கபூர்வமாகச் சிந்திப்பவர்கள். அவர்களிடம் தொழில் திறமை வெளிப்படுவதைக் காணலாம்.

ஒருவர் உந்துதிறன் பெறத் தன்னை நம்புதல் வேண்டும். ஒருவர் தன்னை நம்பும்போது அவர் நல்ல மனப்பான்மையை வளர்த்துக் கொள்கிறார். தன்னை நம்புவது, பிறர் மீது நம்பிக்கை வைப்பது, இறைவன் மீது நம்பிக்கை வைப்பது இவை மூன்றும் நம் முன் நிற்கும் மலையைக்கூட நகர்த்திவிடும் சக்தி படைத்தவை. ஒருவர் தன்னை நம்புவதில் நான்கு முக்கியமான அடிப்படைக் கூறுகள் உள்ளன.

01. வாழ்க்கையில் நாம் அடைய விரும்பும் இலட்சியங்களைப் பட்டியலிட்டுக்கொண்டு அவற்றுள் முதலில் அடைவது என்பது குறித்துச் சிந்தித்தல்.
02. அந்த இலட்சியத்தை அடைவதற்குரிய வழிகளைக் கண்டு பிடித்தல்.
03. நம்மிடம் உள்ள திறமையால், நடத்தையால் இலட்சியத்தை எவ்வாறு அடைவது என்பதைப் பட்டியலிட்டுக்கொள்ளல்.
04. நம்மிடம் உள்ள குறைகளை நீக்கும் வழியறிந்து அவற்றை நீக்கி, அதன் பின் இலட்சியத்தை அடைய முயற்சித்தல்.

நம்மில் பெரும்பாலோர் வாழ்க்கையில் வெற்றி பெற்று மகிழ்ச்சியாக வாழ விரும்புகின்றனர். அதே சமயம், அதனை எவ்வாறு அடைவது என்பது குறித்துச் சிந்திக்க வேண்டும். நம்முடைய ஞானக்கண் கொண்டு அவற்றைத் தேடி, அறிவால் அதைக் கண்டுகொண்டு, சுய உந்துதலுடன் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

### வாழ்க்கையில் குறிக்கோளை வகுத்துக்கொள்வது எப்படி?

நம்முடைய வாழ்க்கைக்கென்று ஒரு குறிக்கோளை வைத்துக் கொண்டு, அதை அடைவதற்காக நம் ஆற்றலை நாம் முடுக்கிவிட வேண்டும். பொதுவாக மனிதருடைய குறிக்கோள் அவருடைய தனிப்பட்ட நலனுக்காகத்தான் முதலில் அமையும். அப்படி இருந்தாலும் அந்தக் குறிக்கோள் நம்முடைய வாழ்க்கைக்கும் ஏற்றதாக இருந்தால் அது நல்ல குறிக்கோளாகக் கருதப்படும். அந்தக் குறிக்கோளைக்கூட ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் அடைந்துவிட நினைப்பது தான் புத்திசாலித்தனமாகும்.

இலட்சியத்தை அடைவதற்கு நாம் கால எல்லை வகுத்துக் கொள்ளும் போது, அவற்றைப் பொதுவாக மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. உடனடிக் குறிக்கோள்
2. சிறிது கால இடைவெளியில் அடிப்படை வேண்டிய குறிக்கோள்
3. நீண்டகால எல்லையில் அடையவேண்டிய குறிக்கோள்.

“ஒன்றை அடைய நினைக்கும் போது அதனை முதலில் நாம் கற்பனையில் நினைத்துப் பார்க்க வேண்டும்” என்கிறார் வால்ட் டிஸ்னி.

### மதமே ம வி த த் தை...

நாம் இயற்கையா...!
நாம் இறை படைப்பின் சாயலா...!
இவைகளுக்கு பதிலேது...???
எம் மெய் மறைக்கும்
கரிய உடை கூட
சூரிய நமஸ்காரமின்றி
துக்கம் அனுஸ்டித்தது போதும்...!
மதி மங்கலுற்ற மத வாதிகள் போடும்
விதிமுறை அற்ற சட்டங்கள் எல்லாம் – எங்கள்
கதி முடித்தது போதும்....!
விதம் விதமாய் வளர்ந்த
விஞ்ஞான மூளைகள் கூட
வீழ்ந்து கிடக்கும் எங்களுக்காய்
விளக்கேற்ற வில்லையே...!
போதும் மதமே போதும்
அந்தகாரத்தில் போட்டு – எம்மை
அழவைத்தது போதும்...!
கரைசேரச் சீதனமின்றி
வியர்வை படிந்த
முவ்வைய இரவுகளுக்கு – எம்மை
பலிகொடுத்தது போதும்...!
மதமே...”
நாமும் இயற்கையே
எம் உணர்வையும் உயிர் வாழவிடு...!


ஜூலி
கள்ளப்பாடு,
முல்லைத்தீவு.

## யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத்தினால் நடாத்தப்பட்ட வினா விடை அறிவுத் தேர்வில் வெற்றியீட்டியோர் விபரம் - 2012

| மறைக்கோட்டம் | பிரிவு - I | பங்கு | பிரிவு - II | பங்கு | பிரிவு - III | பங்கு |
|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1. ஜெ. வலன்ரீனா<br>2. சு. இன்வெஸ்ரா<br>3. த. கனுஷியா | திருநெல்வேலி<br>பேராலயம்<br>யாழ். (OLR) | 1. அன்ரன் கொன்சாலஸ் மேரி சோனியா<br>2. மரியதாஸ் மரீன் நாக்கேல்<br>3. தே. அல்பாஜினி | பாசையூர்<br>யாழ். (OLR)<br>பேராலயம் | 1. அனஸ்ரா தியோஜினஸ்<br>2. நத்நிலோஜனா<br>3. V.J. சறோனமரியா | பாசையூர்<br>சுண்டுக்குளி<br>யாழ். (OLR) |
| தீவகம் | 1. சு. யோனெக்கா<br>2. ஜெ. ஜறின்<br>3. மெ. டிஷாந்தினி | நாரந்தனை<br>சாட்டி/ அல்லைப்பிட்டி<br>மண்டைதீவு | 1. பி.யூட்கனிஸ்ரா<br>2. மேரி நிஷாந்தினி<br>3. மெ. டிசாந்தன் | மண்டைதீவு<br>சாட்டி/ அல்லைப்பிட்டி<br>மண்டைதீவு | 1. மெ. டிலைக்ஷன்<br>2. யூ. தனுஜா<br>3. எ. அன்ரன் ஜஸ்மிதா | மண்டைதீவு<br>r / அல்லைப்பிட்டி<br>மண்டைதீவு |
| இளவாலை | 1. தி. ஹில்லறி அன்ரனைனஸ்<br>2. த. ஆரணி<br>3. யோ. சகானா | இளவாலை<br>குளமங்கால்<br>ஆனைக்கோட்டை | 1. மரீலாக் மதுரா ஞானசீலன்<br>2. சூ. சில்வியா<br>3. ம. விதுஷா | மாரீசன்கூடல்<br>சில்லாலை<br>மாதகல் | 1. கி. சறண்ஜா<br>2. கொ. ஜீன் செளமியா<br>3. அ. பெனிற்றா | குளமங்கால்<br>இளவாலை<br>மானிப்பாய் |
| பருத்தித்துறை | 1. சீ. அண்டஸ்சன்<br>2. க. அனிஸ்ரலா<br>3. ம. மரிய ருத் | புலோப்பளை<br>மிருசுவில்<br>சாவகச்சேரி | 1. இ. அனற் சுதர்சிகா<br>2. இ. யூடின் சிந்துஜா<br>3. அ. டண்சி | மிருசுவில்<br>கரவெட்டி<br>புலோப்பளை | 1. வா. கீர்த்திகா<br>2. த. றொன்யா<br>3. எ. மேரி நிக்சலா | புலோப்பளை<br>கரவெட்டி<br>மிருசுவில் |
| கிளி/ முல்லை | 1. நாகேந்திரன் கெனிஸ்ரன்<br>2. அ. தார்மிகி<br>3. ந. கிசோக்குமார் | இரணைப்பாலை<br>புதுக்குடியிருப்பு<br>அமதிபுரம் | றெ. நிலானி<br>அ. ஆன். அருந்ததி<br>ஸ். சுஜிதா | பூநகரி<br>புதுக்குடியிருப்பு<br>புதுக்குடியிருப்பு | 1. மெ. அ. மரியமிதுரா<br>2. த. அனுசியா<br>3. பீ. பிரதிபா | இரணைப்பாலை<br>கிளிநொச்சி<br>வலைப்பாடு |

**குறிப்பு** :- இவர்களுக்கான மறைமாவட்ட மட்ட போட்டிப் பரீட்சைக்கான திகதி பங்குத்தந்தையர்களூடாக பின்னர் அறிவிக்கப்படும். போட்டி இணைப்பாளர் திரு. பெ.பிரான்ஸ்.


## — 1ம் ஆண்டு நினைவஞ்சலி —




அமரர்
அருட்தந்தை இ. பீற்றர்துரைரட்ணம்

மண்ணில் : 02.08.1943
விண்ணில் : 25.01.2012

"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய பயன் தராது" என்ற மறையுண்மைக்கு பொருள் கொடுத்து இவ்வுலகில் இறைபணியாம் பிறரன்புப் பணிபுரிந்து இறைவனுக்கும் பணிபுரிய வான்வீடு சென்ற அருட்பணி இ. பீற்றர் துரைரட்ணம் அடிகளாரை அவரது மறைவின் முதலாம் வருடத்தில் நினைவுகூர்ந்து பரமபதத்தில் அவர் இளைப்பாற இறைவனைப் பணிவோம்.

Add - 02/13 குடும்பத்தினர்.

## விண்ணகப் பிறப்பின் 11வது ஆண்டு நினைவு தினம்



அமரர்
பத்திநாதர் அருளானந்தம்

மண் மகிழ 11.04.1937
விண் மகிழ 03.02.2002

எம்மோடு என்றும் வாழும் இறைவா! எம் அன்புத்தந்தை வழியாக நீர் எமக்கு செய்த நன்மைத்தனங்களுக்காக உமக்கு நன்றி நவில்கின்றோம். உமது அளவுகடந்த அன்பினால் அவரது ஆன்மாவுக்கு அமைதி அளித்து இன்ப வான்வீட்டில் இடமளித்தருள வேண்டுகின்றோம். ஆமென்.

புனித லூர்து மாதா கோவிலடி,
தும்பளை, பருத்தித்துறை.

செபங்களுடன்
குடும்பத்தினர்.

Add - 01/13

# நம்பிக்கை வாழ்வு என்பது ஒரு தேடலாகும்!

## அலசலும் உரசலும் 15

(சமகால சமூக ஆன்மீக தொடர்)

அருள் முனைவர் ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.

நம்பிக்கை ஆண்டிலே எமது நம்பிக்கை வாழ்வில் வேர்களை தேடிச் செல்வது புதுப்பித்தலுக்கு முக்கியமானது. இன்று அவசர உலகில் தேடல் மிகவும் அருகிவிட்டது. தேடலோடு வாழ்பவர்கள்தான் வாழ்வின் அர்த்தத்தையும் இருப்பின் நோக்கத்தையும் கண்டு கொள்கின்றனர். எதை தேடுகின்றோம் என்பது தான் பிரச்சனை. இன்று உலகில் மனிதன் தன் சுய இன்பத்திற்காக உலகம் சார்ந்தவற்றை தேடுகின்றான். ஏன் சிலவற்றிற்கு அடிமையாகியும் கிடக்கின்றான். உதாரணமாக குடிபோதை, போதைவஸ்து, வன்முறை, தவறான ஒழுக்கப் பிறழ்வுகள் போன்றவை விசுவாச வாழ்வின் இருப்பிற்கு பெரும் தடையாகயுள்ளன. இன்னும் மனிதனின் உள்ளத்தினுள் புதையுண்டு கிடக்கும், தன்னலம், பகைமை, ஆதிக்கவெறி சாதிய உணர்வு எல்லாம் நற்செய்தி மதிப்பீடுகளுக்கு முரணானவை. இத்தகைய தீமைகள் மத்தியில் நம்பிக்கை வாழ்வை புதுப்பிப்பது இலகுவானதல்ல. எனவேதான் சுயத்தை அகத்தை தேடிய பயணமாக நம்பிக்கை வாழ்வுப்புதுப்பித்தல் அமையவேண்டும்.

### சுயத்தைத் தேடும் பயணம் :

ஒரு மனிதனின் சுயம்தான் உண்மையானது என்று அறிஞர்கள் கூறுவர். ஒவ்வொரு மனிதனிலும் மூன்று முகங்கள் என்று கூறுவர். சமூக மனிதன் என்பவன் மகா நடிகன்: நடித்து வெல்பவன். இன்னொருவன் குடும்ப மனிதன் என்பவன், இவன் பாதி நடிப்போடு தோற்றுப் போவான். உண்மையானவன் தன் சுயத்தை அறிந்தவன், தன்னுடைய உள்ளத்தில் இருப்பவற்றை அறிபவன். இன்றும் எமது விசுவாசப் பயணம் என்பது என்னை நான் உணர்ந்து அறிந்து கொள்வதில்தான் தங்கியுள்ளது. அதை விடுத்து உண்மைத்தனை விசுவாச வாழ்வை வெளியரங்க செயற்பாடுகளான பக்தி முயற்சிகள், வழிபாடுகள், மதக்கடமைகள் மூலம் கட்டியெழுப்பமுடியாது. எனக்குள் உறைந்து கிடக்கும் சுயத்தை அறிய அதன் மட்டில் விழிப்புணர்வு அடைய இறைவனின் வல்லமையும் அருளும் இன்றியமையாதது. அடிப்படையில் என்னை நானாக கண்டு கொள்ளும் போதே இறைவனோடு, அடுத்தவரோடு உண்மைத்தனமான உறவுகளை வளர்த்து இறை நம்பிக்கையில் ஆழம்பெற முடியும். இத்தகைய தன்னுணர்வுத் தேடல் வாழ்வு முழுவதும் நடைபெறவேண்டிய பயணமாகும். சில பக்தி முயற்சிகளோடு, நானே உருவாக்கிக் கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கை முறையோடு திருப்திப்படும் போது நாம் செல்ல வேண்டிய நம்பிக்கை வாழ்வுப் பாதையை தவறவிட்டு விடுகின்றோம். இத்தகைய தேடலுக்கு திசை காட்டிகளாக விளங்குபவைதான் விசுவாச கோட்பாடுகள், மறைக்கல்வி திருச்சபையின் வழிகாட்டல் போன்றவையொழிய அவை விசுவாச வாழ்வின் இலக்கு அல்ல என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்வது முக்கியமானது.

### விசுவாச வாழ்வு அநுபவமாக வேண்டும் :

இத்தகைய சுய தேடல் பயணத்தை மேற்கொண்டு உறவின் அடித்தளத்தில் விசுவாச வாழ்வை கட்டியெழுப்பும் போதுதான் விசுாவச வாழ்வு அநுபவமாகின்றது. இறைவனைப் பற்றிய அறிவு அதன் எல்லையை தாண்டி அனுபவிக்க தூண்ட வேண்டும். மேலோட்டமான உணர்வு நிலையை தாண்டி உண்மையான மனமாற்ற அனுபவ பயணமாகவே விசுவாச வாழ்வு நோக்கப்பட வேண்டும். ஏன் இன்றும் விசுவாச வாழ்வு அனுபவ நிலையில்தான் உள்ளது. இதற்கு அடிப்படையான காரணம் இன்றும் கிறிஸ்தவ வாழ்க்கையை மதமாக்கப் பாக்கின்றோம். ஒரு வாழ்க்கை அனுபவமாக நோக்கவில்லை. விசுவாச வாழ்வை அநுபவிக்க கிறிஸ்துவோடு நாம் கொள்ளும் ஒரு நெருங்கிய உறவின் அடித்தளத்தில் தான் அமைய முடியும். கிறிஸ்துவோடு நெருங்கிய உறவில் வாழும் போது தான் எம்மைப்பற்றிய சுய உணர்வையும்,உண்மையை அகத்தின் ஆழத்திலிருந்து புரிந்து கொள்ள முடியும். உண்மையில் விசுவாசம் என்பது எனது சுயத்தை, சுயநலத்தை தாண்டி, எனது சுயம் சார்ந்த முன்னுரிமைகளை கடந்து அடுத்தவரோடு கொள்ளும் அன்பில் ஊற்றெடுக்கும் தெய்வீகமாகும். இத்தகைய நிலையை அடைவது இலகுவாகும். இது ஒரு உள்ளரங்க சார்வின் மூலம், நோவுகள், வலிகளை கடந்தே உள்ளக விடுதலையின்று பிறக்க முடியும். எனது இயலாமைகளை, வரையறைகளை ஏற்றுக் கொண்டு இறைவனை நோக்கிய பயணத்தில் எனது விசுவாசத்தில் வளர்ந்து முதிர்ச்சி பொறுவதாகும். உண்மையில் விசுவாசம் என்பது எனது உள்ளக அநுபவத்தினால் என் உள்ளத்தை அதன் ஆழத்தை புரிந்து கொள்வதாகும்.இது ஒரு வலியை, நோவை தாண்டி மன்னிப்பை, ஒப்புரவை கொண்டிருக்கும் இறையநுபவ பயணமாகும். இப் பயணம் ஒரு விதத்தில் உள்ளார்ந்த தெய்வீகத்தை மனிதருக்கு வெளிப்படுத்தும் பயணமாகும். எனக்கு பாதுகாப்பும், பராமரிப்பும், சுகமும், மகிழ்ச்சியும் அளிக்கக் கூடிய காவலரண்களை தாண்டி இறைவனில் மட்டும் சரணடைந்து வாழும் அநுபவமாகும். கிறிஸ்துவில் மட்டும் ஊற்றெடுக்கும் விசுவாசமாகும். இது இறைவனில் முழு வாழ்க்கையையும் ஒப்படைத்து உலகில் நான் தேடும் அனைத்தையும் பணயம் வைத்து இழக்கத்தயாராகும் வெறுமை நிறைந்த வாழ்வாகும். இது ஒரு தொடர் மனமாற்றப் பயணம் என்பதை மறந்து விட முடியாது.

### தேடல் தொடரவேண்டும்

விசுவாச வாழ்வு என்பது முழுவதும் தொடர வேண்டிய பயணம் என்பதில் இரு கருத்து இருக்க முடியாது. விசுவாச வாழ்வும் சாக்கடையாக தேங்கி ஓரிடத்தில் நிற்க முடியாது. அது ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நதியாகும். நதியாகிப்போன பயணத்தில் இடர்களை தடைகளை, சிலுவைகளை தாண்டி பயணிக்கின்றபோதே அது தெளிந்த நீரோடையாக மாறுகின்றது. இதன் அடிப்படையில் ஒரு தொடர் தேடல் இன்றியமையாதது. இயேசுவும் தன் வாழ்க்கை பயணத்தில் தன் தந்தையை நோக்கிய பயணத்தில் உடலால், உள்ளத்தால், உணர்வால் சோதிக்கப்பட்டார். மனித நிலையில் இத்தகைய சோதனைகளை தந்தையிடம் கொண்டிருந்த நெருங்கிய உறவின்மூலம் எதிர்கொள்டு வெற்றி கொண்டார். இதுவே இன்றும் எமது தளர்ந்து போன விசுவாச வாழ்விற்கு உந்து சக்தியாகவுள்ளது. இன்று பல வழிகளில், பல வடிவங்களில் நாம் அநீதியான முறையில் எமது விசுவாசம் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றது. உடல்ரீதியில நுகர்வு கலாச்சாரத்தினால் சோதிக்கப்படுகின்றோம். உடலின் தேவைகளைப் □ர்த்தி செய்யும் தேவைகளுக்கு அடிமையாகி இறைவனை ஓரம் கட்டுகின்றோம். தொலைக்காட்சி, கணனி, கைத்தொலைபேசிகள், குடிவெறிகள், களியாட்டங்கள் போன்றவை மூலம் இறைபற்றை இழந்து விடும் நிலைக்குத்தள்ளப்படுகின்றோம் எமது தேடல் உலக இன்பங்களை தேடுவதையே சார்ந்ததாக அமைந்து விடுகின்றது. உள்ளத்து நிலையில் அடுத்தவரோடு பகைமையில், வெறுப்பில், தீமை செய்வதில், பழிவாங்குவதில் நிலைத்து நிற்கின்றோம். இது உள்ளத்து அடித்தளத்தில் ஏற்படும் சோதனைகளாகும். இவற்றின் மத்தியில் விசுவாசம் நம்பகத்தன்மை உள்ளதாக, சாட்சியமுள்ளதாக, கடவுளுக்கு ஏற்புடையதாக அமைய முடியாது. சில வேளைகளில் உணர்வு ரீதியாகவோ எமது ஆன்மீக வாழ்வு உள்ளது. இது மோலோட்டமான பக்தி முயற்சிகளில், வழிபாடுகளில் விசுவாச வாழ்வை வரையறுத்து வாழ்வதாகும். எனவே உண்மையான தேடல் உறவை மையப்படுத்தியாக அமையும் போதே விசுவாசம் தீயாக கொழுந்து விட்டு எரியும். இத்தகைய வாழ்வுக்கு திரும்புவோமா?

(உரசல் தொடரும்...)

**யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தால் வருடாந்தம் நடாத்தப்படும் திருமறைக்கல்வித் தேர்வில், 2012ம் ஆண்டு ஐப்பசி மாதம் 13ம் திகதி நடைபெற்றது. இத்தேர்வில் ஐந்து மறைக்கோட்டங்களில் இருந்தும் 245 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கு கொண்டு தேர்வு எழுதியவர்களில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர்கள் பின்வருமாறு :**

| தரம் | பாடசாலையின் பெயர் | மாணவர் பெயர் | நிலை | புள்ளி |
|---|---|---|---|---|
| 03 | யா/ புனித பத்திரிசியார் கல்லூரி | ட. அபிஷ் கிளைன் | 1ம் இடம் | 96 |
| | யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை | யூட் அமலதாஸ் அபிஷா | 2ம் இடம் | 95 |
| | a / இராமநாதன் கல்லூரி | அருளப்பு ஸ்செபான் | 3ம் இடம் | 94 |
| 04 | யா/ சில்லாலை றோ.க.த.க. பாடசாலை | ஸ்.றெ. அமலிஸ்ரா | 1ம் இடம் | 98 |
| | யா/ இள. கன்னியர் மடம் மகாவித்தியாலயம் | பாலகுமார் சோபியா விழுர்சினி | 2ம் இடம் | 97 |
| | யா/ புனித பத்திரிசியார் கல்லூரி | வீ. அஜின் டெஸ்னோ | 3ம் இடம் | 96 |
| 05 | யா/ மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை | அருள்ஞானசீலன் மேரி லக்சிகா | 1ம் இடம் | 97 |
| | யா/ கரம்பொன் சிறிய புஷ்பம் மகாவித்தியாலயம் | ஜெனிதன் மேரி றெபேக்கா | 2ம் இடம் | 93 |
| | யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் | அ. அனோசிகா | 3ம் இடம் | 90 |
| 06 | முல்/ புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயம் | இ. அகல்விழி | 1ம் இடம் | 97 |
| | கிளி/ இயக்கச்சி அ.த.க. பாடசாலை | குமார்ஞானதீபன் அனற்மரீனா | 2ம் இடம் | 94 |
| | யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை | ஸ்ரெபி ஜெனிபர் கிருபா | 3ம் இடம் | 93 |
| | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை | அல்டன் பிரியதர்சா | 3ம் இடம் | 93 |
| 07 | யா/ வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி | ஜக்சன் டிவோண் வேஜிலியா | 1ம் இடம் | 92 |
| | யா/ மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை | க. அனுஸ்ரலா | 2ம் இடம் | 91 |
| | யா/ வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி | மரியடெரன்ஸ் டிறோஜா | 3ம் இடம் | 90 |
| 08 | யா/ வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி | யுவீற்றன் கமலியா | 1ம் இடம் | 93 |
| | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை | அரசரட்ணம் றொபிசா | 2ம் இடம் | 91 |
| | யா/ சென் தோமஸ் றோ.க. பாடசாலை | ஜெகநாதன்சில்வா ஜெகப்பிறின்சியா | 3ம் இடம் | 90 |
| 09 | யா/ பண். பெண்கள் உயர்தர பாடசாலை | சூசைப்பிள்ளை எட்வின் சில்வியா | 1ம் இடம் | 93 |
| | யா/ ஊர். புனித மரியாள் றோ.க. பாடசாலை | விமலதாசன் மேரி அல்பினா | 2ம் இடம் | 93 |
| | யா/ இள. கன்னியர் மடம் மகாவித்தியாலயம் | புஸ்பராசா பிறிஜிற் யஸ்மிதா | 3ம் இடம் | 91 |
| 10 | யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி | கந்தசாமி மினுஜா | 1ம் இடம் | 96 |
| | யா/ கரம்பொன் சிறிய புஷ்பம் மகளிர் மகாவித்தியாலயம | சிவறாஜன் சாளினி | 2ம் இடம் | 92 |
| | யா/ கரம்பொன் சிறிய புஷ்பம் மகளிர் மகாவித்தியாலயம | அந்தோனி அமலவெனான்சியா | 3ம் இடம் | 91 |
| 11 | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை | யூலியஸ் ரூபேந்திரன் பூங்கோதை | 1ம் இடம் | 97 |
| | யா/ வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி | அன்ரன் நிக்கலின் ஸ்ரனிஷா | 2ம் இடம் | 92 |
| | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை | வின்சன்டிபோல் சோபனா | 3ம் இடம் | 91 |

## 35ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 24 ✠ 11 ✠ 1926



உதிர்வு 30 ✠ 12 ✠ 2012

### அமரர். நீக்கிலான் சின்னப்பு

"உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன் அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்"
(யோவான் 14 : 3)

உயிர்ப்பும் உயிருமாகிய இறைவா!
எம்மை பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய எம் தந்தை இவ்வுலக வாழ்வின் பயணத்தை நிறைவு செய்து உம் பாதமே கதியென்று சரணடைந்துள்ளார். இவரை உம் கரத்தில் ஒப்புக்கொடுக்கின்றோம். கருணைகூர்ந்து உம் நித்திய பேரின்பத்தைக் கட்டளையிட்டருளும்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 02.02.2013 சனிக்கிழமை மு.ப 11.30 மணிக்கு மன்னார் கிறி கர்த்தர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்கு கொள்வதோடு எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சில்லாலை.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

# பாலியல் வன்கொடுமைக்கு எதிராக இந்திய ஆயர்கள்

இந்தியாவில் பெண் ஒருவர், வன்முறைக் கும்பல் ஒன்றால் பாலியல் வன்கொடுமைக்கு மீண்டும் உள்ளாகியிருப்பது, நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கின்றது என்று சொல்லி, அவ்வன்கொடுமை குறித்துத் தங்களது வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளனர் இந்திய ஆயர்கள்.

கடந்த டிசம்பரில் 23 வயது மருத்துவக் கல்லூரி மாணவி ஒருவர் புதுடெல்லியில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகி இறந்துள்ள வேளை, பஞ்சாப் மாநிலத்தின் Amristar ல் 29 வயதுப் பெண் ஒருவர் ஆறு ஆண்களால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகியிருப்பது குறித்து இந்திய ஆயர்கள் பேரவையின் பேச்சாளர் அருள்பணி Dominic D'Abreo Fides செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், இவ்விவகாரம் தொடர்பாக இந்திய ஆயர்களின் கருத்தைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு மனிதரின் வாழ்வும் புனிதமானது என்றும், பெண்களின் மாண்பை அவமதிக்கும் இத்தகைய வன்செயல்களை நிறுத்துவதற்கும் கல்வித்துறையில் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அருள்பணி Dominic கூறினார்.

பாலியல் வன்கொடுமைச் செயல்கள் மிகுந்த வருத்தம் அளிக்கின்றன என்றுரைத்த அக்குரு, நாம் அனைவரும் இறைவனின் குழந்தைகள், ஒவ்வொரு மனிதரும் மதிக்கப்பட வேண்டியவர்கள். எனவே இத்தகைய செயல்கள் இடம்பெறவே கூடாது என்றும் கூறினார்.

மேலும் "பாலியல் சமத்துவத்துக்கான நீதி நாள்" இம்மாதம் 27ம் திகதியன்று மும்பை உயர் மறைமாவட்டத்தில் கடைப்பிடிக்கப்படவிருப்பதையும் குறிப்பிட்ட அருள்பணி Dominic, இந்தியர்கள் அனைவரும் விழிப்புணர்வு பெற இந்நாள் ஊக்கமளிக்கும் என்ற தனது நம்பிக்கையையும் தெரிவித்தார்.

பெண்கருக்கள் அழிப்பு, பெண் சிசுக்கொலை, வரதட்சணை இறப்புகள், பாலியல் வன்கொடுமை போன்றவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தில் இம்மாதம் 27ம் திகதியன்று அனைத்துப் பங்குகளிலும் 3 கோடியே 70 இலட்சம் எண்ணெய் விளக்குகள் ஏற்றப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

Ammristarல் 29 வயதுப் பெண் ஒருவர் பேருந்தில் தனியாகப் பயணம் செய்ததை அப்பேருந்தின் ஓட்டுனரும் நடத்துனரும் பயன்படுத்திக்கொண்டு, அப்பெண்ணின் கிராமத்தில் வண்டியை நிறுத்தாமல் ஒதுக்குப்புறமான வீடொன்றுக்கு வலுக்கட்டாயமாகக் கொண்டு சென்று மேலும் ஐந்து பேரை அவ்விடத்துக்கு வரவழைத்து அப்பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர் என்றும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# கிறிஸ்து அரசர் இளையோர் ஒன்றிய இரவுநேரப் பாடசாலை

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்ட கிறிஸ்து அரசர் ஆலய இளையோர்களினால், அக்கிராமத்தில் உள்ள சிறுவர்களுக்கு மாலை நேர வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. அவ்வகுப்புக்களில் தரம் 02-தரம் 10 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இதில் ஆலய இளைஞர்களில் சிலர் ஆசிரியர்களாக அங்கு கடமையாற்றுகின்றனர். அருட்தந்தையின் கண்காணிப்பின் கீழ் இம்மாலை நேர வகுப்புக்கள் நடைபெற்று வருகிறது. கிறிஸ்தவ பிள்ளைகள் மட்டுமன்றி அனைத்து சமயப் பிள்ளைகளும் கல்வி பயில்கின்றனர். சமூகத்தில் ஒழுக்கமும், கல்வியும் தாழ்ந்து போகும் காலத்தில் இவர்களை இரண்டிலும் மேன்மையடையச் செய்து சமூகத்தை நல்வழிப்படுத்துவதே நோக்கமாகும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு மாணவர்களும்சரி, ஆசிரியர்களும் சரி, பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொண்டு முன்னோக்கி செல்கின்றார்கள்.

**ரஞ்சி சூசைப்பிள்ளை.**

# தும்பளை தூய லூர்து அன்னை திருத்தல பெருவிழா

திருத்தல பெருவிழா நவநாட்கள் 02.02.2013 - 10.02.2013 வரை நடைபெறும். நவநாட்களில் வழிபாடுகள் மாலை 4.30 மணிக்கு செபமாலையும் மாலை 5.00 மணிக்கு திருப்பலியும் இடம்பெறும்.

நற்கருணை பெருவிழா 10.02.2013 அன்று நடைபெறும். திருவிழாத் திருப்பலியானது 11.02.2013 அன்று முதற்திருப்பலி காலை 5.30 மணிக்கும், திருநாட்திருப்பலி காலை 7.00 மணிக்கும் இடம்பெறும். திருத்தல பெருவிழாவிற்கான ஆயத்த மறையுரைகளை அருட்பணி. ராஜ்கிளாயர் (அ.ம.தி) அவர்கள் வழங்குவார் என்பதை திருத்தல பரிபாலகர் அருட்பணி. ஜோன் மவுலிஸ் அடிகளார் பாதுகாவலனுக்கு தெரிவித்தார்.

# கடந்த 40 ஆண்டுகளில் அமெரிக்காவில் 5 கோடியே, 50 இலட்சத்திற்கும் அதிகமான குழந்தைகள் கருவில் அழிக்கப்பட்டுள்ளனர்

இம்மாதம் 19ம் திகதி முதல் 27ம் திகதி முடிய அமெரிக்காவில் வாழும் கத்தோலிக்கர்கள் செபத்திலும், உண்ணா நோன்பிலும் ஈடுபடுமாறு அந்நாட்டு ஆயர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

40 ஆண்டுகளுக்கு முன் ஜனவரி 22ம் திகதி அமெரிக்காவில் கருக்கலைத்தல் சட்டமயமானது. இதையடுத்து, கடந்த 40 ஆண்டுகளில் அமெரிக்காவில் 5 கோடியே, 50 இலட்சத்திற்கும் அதிகமான குழந்தைகள் கருவில் அழிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வன்கொடுமைக்கு எதிராகவும், உயிர்கள் போற்றி வளர்க்கப்பட வேண்டும் என்ற கலாச்சாரத்தை உருவாக்கவும் ஒன்பது நாள் செபத்திற்கும், உண்ணா நோன்பு மற்றும் திருப்பயணங்களுக்கும் அமெரிக்க ஆயர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்நாட்களில் நடைபெறும் பல்வேறு முயற்சிகளின் ஒரு சிகரமாக, ஜனவரி 25ம் திகதி வாஷிங்டன் நகரில் நடைபெறும் ஓர் ஊர்வலத்தில் இலட்சக்கணக்கானோர் கலந்து கொள்வர் என்று எதிர்பார்ப்பதாக CNA செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.

# அருட்பணியாளர்கள் விக்டர் பிலேந்திரன், வென்சஸ்லோஸ் அடிகளார்களின் தாயார் காலமானார்

எமது மறைமாவட்ட குரு அருட்பணி. பேராசிரியர் விக்டர் பிலேந்திரன், அமலமரித்தியாகிகள் சபை குரு வென்சஸ்லோஸ் அடிகளாரின் தாயார் ஞானமுத்து கிறிஸ்ரினம்மா கடந்த தை 21ம் திகதி காலமானார்.

பேராசிரியர் விக்டர் பிலேந்திரன் அடிகள் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை தலைவராகவும், அருட்பணி. வென்சஸ்லோஸ் அடிகள் திருநெல்வேலி பங்குத்தந்தையாகவும் பணியாற்றுகின்றார்கள். தாயாரை இழந்திருக்கும் குருக்களுக்கும் அவர்களின் உறவுகளுக்கும் பாதுகாவலன் அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபங்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

# ஆயர் எல்.ஆர் அன்ரனி நினைவுத் திருப்பலி

மறைந்த திருமலை - மட்டு நகர் ஓய்வுநிலை ஆயர் எல் -ஆர் அன்ரனி ஆண்டகையின் நினைவாக யாழ் மறைமாவட்ட ஆயர் குருக்கள் இணைந்து நினைவுத் திருப்பலியை எதிர்வரும் தை 28ம் திகதி காலை 11.30 மணிக்கு ஆயர் இல்லத்தில் ஒப்புக்கொடுப்பர். மறைந்த ஆயர் அவர்கள் யாழ் மறைமாவட்டத்தில் துணை ஆயராக பணிபுரிந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மறைந்த ஆயர் நினைவாக கடந்தவாரம் கொழும்பு கத்தோலிக்கர் வெள்ளவத்தை புனித லோறன்ஸ் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

# புலோப்பளையில் குழந்தை இயேசு ஆலய திறப்பு விழா

பளைப்பங்கில் அமைந்துள்ள அறத்தி நகர் என்கிற சிறிய கிராமத்தில் வாழும் சுமார் முப்பது குடும்பங்களின், விசுவாசத்தை, வளர்க்கும் முகமாக ஓர் சிறிய குழந்தை இயேசு ஆலயம், பங்குத்தந்தையின் கடின முயற்சியுடனும், ஆலய மக்களின் முயற்சியாலும் அமைக்கப்பட்டுள்ளது. காலஞ்சென்ற முன்னைய நாள் பங்குத்தந்தை அருட்பணி. கருணாரட்ணம் (கிளி) அடிகளாரால், ஒரு சிறிய ஓலை குடிசையாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம், இப்போது அழகான ஒரு ஆலயமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு உதவிய அனைத்து நல்ல உள்ளங்களையும், நன்றி கலந்த செப உணர்வோடு பங்கு மக்கள் நினைவில் கொள்கின்றோம்.

# கொழும்பு பேராலய இளையோர் புலோப்பளை இளையோருக்கு உதவி

கொட்டாஞ்சேனை தூய லூசியாஸ் ஆசனக் கோவிலின், தூய டொன்பொஸ்கோ இளையோர் முன்னணி தமது நத்தார் கால ஆடம்பர செலவினை தியாகம் செய்து அப்பணத்தை புலோப்பளை இளையோருக்கு வழங்கியுள்ளது.

நத்தார் காலத்தில் தமது பங்கில் சேர்ந்த 165000/= பெறுமதிமிக்க பாடசாலை உபகரணங்களை கொழும்பு பேராலய உதவி பங்குத்தந்தை அருட்பணி அலன் யூஸ்ரன் ஊடாக புலோப்பளை பங்குத்தந்தை அருட்பணி. ஜேம்ஸ் நாதனிடம் வழங்கியுள்ளது.

இப்பாடசாலை உபகரணங்கள் புலோப்பளை பங்கில் வாழும் வசதி குறைந்த மாணவர்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டது.

கொழும்பு பேராலய இளையோரின் இம்முயற்சியை பலரும் பாராட்டினர்.

# எதிர்கால வாழ்வின்... (1ம்பக்கத் தொடர்ச்சி)

மக்கள் உயிரிழந்திருக்கின்றனர். அதாவது குடும்பம் குடும்பமாக, பச்சிளங்குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இதைவிட எண்ணிக்கை உறுதிப்படுத்தப்படாத மக்கள் காணாமற் போயுள்ளனர் எனவும் அடிகளார் தெரிவித்தார்.

நிகழ்வில், முப்பது, வருடகால போரின்போது உயிரிழந்தவர்களுக்கு நினைவுச் சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து உயிரிழந்தவர்களின் ஆன்ம சாந்திக்கான சர்வமதப் பிரார்த்தனைகள் நடைபெற்றன. இதில் மதத் தலைவர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# டொன் பொஸ்கோ விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

முழங்காவிலில் அமைந்துள்ள தூய டொன்பொஸ்கோ தொழில் பயிற்சி நிலையத்தின் விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் தை மாதம் 31ம் திகதி நடைபெறவுள்ளது.

தூய பொஸ்கோவின் விழாவாகிய அத்தினத்தில் அப்பயிற்சி நிலையத்தில் பயிற்சியை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு சான்றிதழ்களை பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கும் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வழங்கி சிறப்பிப்பார்.

அன்றைய தினம் இந்நிலையத்தின் இயக்குநர் தந்தை அருட்பணி பயஸ் அடிகள் தமது குருத்துவ விழாவின் வெள்ளி வழா திருப்பலியையும் இந் நிலையத்தில் கொண்டாடி மகிழ்வார்.

# புங்குடுதீவு 2030 நோக்கி...

புங்குடுதீவு சமூக பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் 2030ம் ஆண்டில் பண்பாட்டின் தளத்தில் வளமுள்ள புங்குடுதீவு நோக்கி... எனும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் புங்குடுதீவு பாடசாலை மாணவர்களுக்கு இடையில் ஆக்கப் போட்டிகளான, கவிதை, கட்டுரை, பேச்சு, சுவரொட்டி போன்ற போட்டிகளை நடாத்தி வருவதாக பங்குத்தந்தை அருட்பணி. ஆம்ஸ்ரோங் அடிகள் பாதுகாவலனுக்கு தெரிவித்தார்.


**Diploma in Nursing - 3 Years**

**Holy Cross School of Health Science**

**விண்ணப்ப இறுதித்தினம் - 28.02.2013**

**கற்கைநெறிக் கட்டணம் : 750/=**

க.பொ.த உயர்தரத்தில் 3பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை சுகநல நிலையம் 767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும் அல்லது தொலைபேசியினூடாக தொடர்புகொள்ளவும்.

*பணிப்பாளர்.*

**தொ.பே.இல - 0213001102 OR 0770712366 OR 0774270120**

Add - 08/13


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2013 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.